# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 09 புதன்கிழமை (23-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:148


# புலிகள் தெரிவித்திருக்கும் விடயங்கள் குறித்து அரசு விரிவாகப் பதில் தரும் என்கிறார் பிரதமர்

கொழும்பு,ஏப்.23

நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுகள் சம்பந்தமான சில பாரதூரமான விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டை விரிவாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கும்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், புலிகளின் பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கத்துக்கு - கிளிநொச்சியில் உள்ள புலிகளின் தலைமையகத்துக்கு விலாசமிட்டு - நேற்றுத் தாம் அனுப்பி வைத்துள்ள அவசரக் கடிதத்திலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

சமாதானப் பேச்சுகளில் கலந்து கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் தீர்மானத்தை அறிவித்து, அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணிலுக்கு ஒரு நீண்ட கடிதத்தை அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்திற்குப் பதில் அளித்து நேற்று அனுப்பிய ஒரு சுருக்க கடிதத்திலேயே அரசின் நிலைப்பாடு விரிவாக அறிவிக்கப்படும் என்று பிரதமர் ரணில் தெரிவித்திருக்கிறார்.

பிரதமரின் கடிதம் வருமாறு:-

நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுகள் தொடர்பான சில பாரதூரமான விடயங்கள் குறித்து உங்கள் அமைப்பின் கருத்துக்களை விளக்கிக் கூறி ஏப்ரல் 21 ஆம் திகதி அனுப்பப்பட்ட உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

உங்களது கவலைகளை நான் கவனத்தில் எடுத்துள்ளேன். அவை குறித்து விரிவாக நான் பதிலளிப்பேன்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வைத் தேடுவதிலுள்ள உங்களின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியிருப்பதை அவதானித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(13ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அறிவிப்பால் தலைநகர் கொழும்பில் பெரும் அதிர்வலைகள்

## அரசாங்க உயர்மட்டத்தில் தீவிர ஆலோசனைகள் வேண்டிய நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகள்

கொழும்பு,ஏப்ரல்23

**சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதைத் தாம் தற்போதைக்கு இடைநிறுத்த முடிவு செய்திருப்பதாக அரசுக்கு விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது, தலைநகர் கொழும்பு எங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.**

**மீண்டும் யுத்தமா? பாதுகாப்புக் கெடுபிடிகளா என்ற ஏக்க உணர்வுடன் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அரசாங்க உயர்மட்டத்தில் அடுத்து என்ன என்று ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.**

விடுதலைப் புலிகளின் அறிவிப்பு அடங்கிய கடிதம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்தது.

அவர் உடனே லண்டனில் தங்கியிருந்த அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கு டெலிபோன் செய்து கலந்தாலோசனை நடத்தினார்.

அமெரிக்கா சென்றிருக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடனும் பிரதமர் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேசினார்.

கொழும்பில் தனது நம்பிக்கைக்குரிய அமைச்சர்கள், அதிகாரிகளுடனும் பிரதமர் கலந்தாலோசனை நடத்தினார்.

'உங்கள் கடிதம் கிடைத்தது. விரிவான பதில் பின்னர் அனுப்பப்படும்' என்ற தோரணையில் அன்ரன் பாலசிங்கத்திற்கு பிரதமர் ரணில் நேற்றுக்காலை கடிதம் எழுதினார்.

முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டபடி நேற்றுக்காலை 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை ஜனாதிபதி சந்திரிகாவைப் பிரதமர் சந்தித்துப் பேசினார்.

பேச்சின் பெரும் பகுதி புலிகளின் அறிவிப்பு பற்றியதாகவே இருந்தது என்று விடயம் அறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பாதுகாப்புக் கவுன்சில் கூட்டமும் நேற்று நடந்தது. ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அதிகாரிகள் முதலானோர் கலந்துகொள்ளும் கூட்டம் இது.

நேற்று இந்தக் கூட்டத்திலும் புலிகளின் அறிவிப்பு பற்றி ஆராயப்பட்டது.

பாதுகாப்புக் கவுன்சில் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் திங்கள் இரவே ஜனாதிபதி முப்படைகளின்

(13ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு இடைநிறுத்தப்பட்டாலும் உபகுழுக்களின் கூட்டங்கள் நடைபெறும் என நம்பிக்கை

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தினாலும், பேச்சுக்களின் போது நியமிக்கப்பட்ட உப குழுக்களின் கூட்டங்களும் அவற்றின் செயற்பாடுகளும் தங்குதடையின்றி தொடர்ந்து நடைபெறும் என பிரதமரின் அலுவலகத்தில் இயங்கும் சமாதான செயலகம் அறிவித்துள்ளது.

இதன்படி வடக்கு - கிழக்குக்கான அவசர மற்றும் மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உப குழுவின் (சிரான் உபகுழுவின்) கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி திட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தீர்மானம் குறித்து ஜனாதிபதி ஆழ்ந்த அதிருப்தி

அரசுடனான சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான தீர்மானம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆழ்ந்த அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி செயலகம் இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எவ்வாறாயினும், போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் சம்பவங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## படைத் தளபதிகளை அழைத்து ஜனாதிபதி அவசர ஆலோசனை

### பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவு

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தியிருப்பதை அடுத்து எழுந்துள்ள நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படைகளின் தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் திங்களிரவு அழைத்து அவசர ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து படைத்தளபதிகளுடன் ஜனாதிபதி மதிப்பீடு மேற்கொண்டார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1995 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மீண்டும் ஏற்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா படைத்தளபதிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

மக்களின் பாதுகாப்பையும் பந்தோபஸ்தையும் உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி அவர்களைப் பணித்திருக்கிறார். (ஐ)

## புலிகளின் முடிவு அதிருப்தியின் வெளிப்பாடு

# போர் மூண்டு விடும் என எவரும் அஞ்சவேண்டாம்!

## பாலகுமாரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.23

ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுக்களை இடைநிறுத்தியிருப்பதால் போர் மூண்டு விடும் என்று எவரும் அஞ்சாதீர்கள். எமது (விடுதலைப் புலிகள்) அதிருப்தியை, மனக்கவலையை வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையே இது. சமாதான முயற்சிகளில் இது வரை நாங்கள் கடைப்பிடித்துவந்த நெகிழ்ச்சிப் போக்கு முடிவுக்கு வந்துள்ளது அவ்வளவுதான். எமது மக்கள் சரியாக இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே. பாலகுமாரன்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்காக விடுதலைப் புலிகளின தலைமைப் பீடத்தின் பணிப்பின் பேரில யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள புலிகளின் அரசியல் குழுவினர் கருத்துப் பகிர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இந்தக் குழுவிற்கு தலைமை வகித்து வந்துள்ள வே.பாலகுமாரன் நேற்றுக் காலை கொக்குவிலில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் செய்தியாளர்களுடன் கலந்துரையாடினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

தீவிரமடைந்துவரும் அரசியல் சூழ்நிலை குறித்து யாழ்.மக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களுடன் கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொள்ளுமாறு எமது தலைமை விடுத்த வேண்டுகோளின்படி - வழிகாட்டலின் கீழ் -

(13ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமருக்குக் கடிதம் அனுப்பிவைப்பு

கொழும்பு,ஏப்.23

புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளமை மற்றும் மூதூர் சம்பவம் ஆகியவை குறித்து விவாதிப்பதற்கு உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு பிரதமருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமை யான பாரிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு உகந்த இடம் நாடாளுமன்றமே என்பதைக் கவனத்திற் கொண்டு நாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புதிய வியூகம் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது

## பேச்சுக்கள் தடைப்பட்டமை குறித்து ஹக்கீம்

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுக்களை புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பது நிரந்தரமான ஒரு முறிவை ஏற்படுத்த யாரும் அனுமதிக்கக் கூடாது. சமாதானப் பேச்சுக்கள் இடையில் முறிவடைவது இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் ஆபத்தாகவே அமையும் என ஸ்ரீல.மு.கா. தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உதயனுக்குத் தெரிவித்தார்.

புலிகள் இப்போதும் கூட சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கை இழந்துவிட்டதாகக் கூறவில்லை. இந்தத் தற்காலிக இடைநிறுத்தம் நிரந்தரமாகினால் அது நாட்டுக்கே ஆபத்தாகிவிடும்.

இப்பொழுது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் புதிய ஒரு வியூகத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இன்று புலிகளுக்கும் அரச படையினருக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு சாதாரண பொதுமக்களுக்கு இல்லை. எனவே, பொதுமக்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்; இந்த இடைவெளி நிரப்பப்படவேண்டும்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைய இரு பக்கத்தினரும் இடமளித்துவிடக் கூடாது என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

**முத்து சிவலிங்கம் (இ.தொ.கா.)**

நாட்டில் பெரும்பான்மையான மககள் சமாதானம் மலரவேண்டும் என் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இணக்கப்பாடு கண்ட விடயங்களைச் செயற்படுத்த அரசு அதிவேகத்துடன் செயற்பட வேண்டும். கடந்த 15 மாதகாலமாக நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். இந்த நிம்மதி நீடிக்க வேண்டும். எனவே, அரசும் - புலிகளும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடன் மீண்டும் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்பதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கருத்தாகும்.

**மனோ கணேசன் எம்.பி.**

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த 15 மாதங்களில் தெற்கில் வாழும் சிங்கள மக்களே பெரும் நன்மைகளை அனுபவித்தனர். தமிழ் மக்களுக்கு அற்ப நன்மைகளே கிடைத்தன. இருந்த போதிலும் புலிகள் மிகவும் சகிப்புத்தன்மையுடன் செயற்பட்டார்கள்.

பேச்சுக்களைத் தற்காலிகமாகப் புலிகள் இடைநிறுத்தியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இவ்வாறு கூறினார் மே.மா.ம.மு தலைவர் மனோ கணேசன் எம்.பி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு அமெரிக்காவில் இடம்பெற்ற போது அதற்குப் புலிகள் அழைக்கப் படாமைக்கு அந்த நாடு புலிகளைத் தடை செய்திருப்பதாகக் காரணம் கூறப்பட்டது.

இலங்கை அரசு நினைத்திருந்தால் அந்த மாநாட்டை அமெரிக்காவுக்கு வெளியே நடத்தியிருக்கலாம்.

போர் நிறுத்தப்பட்டு 15 மாதங்களில் தென்பகுதியில் வாழும் மக்கள் பெரும் நன்மைகளையே அனுபவித்தனர். இன்று அந்தக் கொடூர யுத்தத்தை மறந்து செயற்படுவது கவலைக்குரியது - என்றார் அவர். (ஐ)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் காயம்!

கிளிநொச்சி,ஏப்.23

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் தலையிலும் காலிலும் படுகாயம் அடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி உதயநகர் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த பன்னீர்செல்வம் கிருஷ்ணகுமார் (வயது 21) என்பவர் படுகாயமடைந்தார்.

இவர் அங்கிருந்து அன்றிரவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

(ஒ-4)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த எய்ட்ஸ் தடுப்புக் குழுவினர் 'உதயன்' பணிமனைக்கும் வருகை தந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. இடமிருந்து வலமாக 'யுனிசெவ்' அதிகாரிகளான டாக்டர் இராந்தி விஜயநாயக்க, செலின் லோகோபிரட், சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் திருமதி இயந்த அபயவிக்ரம ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்:தேவராஜன்)*

# குடாநாட்டில் 'எய்ட்ஸ்' நிலைமை சுகாதார அதிகாரிகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.23

குடாநாட்டில் எய்ட்ஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் விழிப்புணர்வுத் திட்டம் ஒன்றை 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னோடியாக 'எய்ட்ஸ்' தொடர்பாக இங்குள்ள நிலைமையை நேரில் அறிய உயர்மட்டக குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

சுகாதார அமைச்சின் 'எய்ட்ஸ்' நோய்த்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் திருமதி இயந்த அபயவிக்ரம, 'யுனிசெவ்' அமைப்பின் 'எய்ட்ஸ்' நோய் தடுப்பு அதிகாரி டாக்டர் இராந்தி விஜயநாயக்க ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்களுடன் 'யுனிசெவ்' அமைப்பின் யாழ்.அலுவலகப் பிரதிநிதி செலினலோகோபிரட்டும் இணைந்து யாழ்ப்பாணத்தில் பலரைச் சந்தித்தனர்.

-யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர், யாழ்.அரச அதிபர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து 'எய்ட்ஸ்' நோய்த் தடுப்பு பிரசாரம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின தொண்டர்கள் மேற்கொண்டுவரும் 'எய்ட்ஸ்' எதிர்ப்பு நடவடிக்கைகள், மதுபானம், சிகரெட், போதைப் பொருள் ஆகியவற்றின் பாவனைகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை குழுவினர் நேரில் அறிந்து கொண்டனர்.

யாழ்.வைத்தியசாலையில் பாலியல் நோய்களைக் கண்டுபிடிக்க ஆய்வு கூடம் ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்றும் -

தாதிகள் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் -

சுகாதார சேவைகள் அமைச்சு பணிப்பாளரான இயந்த அபயவிக்ரம உதயனுக்குத் தெரிவித்தார்.(ஐ-3)

# விளையாட்டு விழாக்களுக்கு முன்அனுமதி பெற வேண்டும்

## விளையாட்டுத்துறை பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

பொது அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டு விழாக்களுக்கு முன்அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

விளையாட்டுத்துறைக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கும் நோக்கில் பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் நடத்தும் விளையாட்டு விழா தொடர்பாக முன்அனுமதி பெற வேண்டும் என்று கேட்டுள்ளோம்.

சில தினங்களுக்கு முன்னர் எமது அனுமதி இன்றி யாழ்.நகரில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் கழகங்களுக்கு இடையில் முரண்பாடான நிலைதோன்றியது. எமது முன் அனுமதியின்றி விளையாட்டு விழா நடத்தப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எதிர்காலத்தில் விளையாட்டு விழாக்களை நடத்துவதாயின் எம்மிடம் முன்அனுமதி பெறவேண்டும். முன் அனுமதியின்றி விளையாட்டு விழா நடத்த முற்பட்டால், அதைத் தடை செய்வோம்.

விளையாட்டு விழாக்களை சுமுகமாக நடத்தி விளையாட்டுக் கழகங்களுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடன் தமிழீழ விளையாட்டுத்துறைக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -

இவ்வாறு விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-3)

# 'பிக்கப்'களை மீளப் பெறுவதற்கு விரைவில் தீவிர சட்ட நடவடிக்கை

## அமைச்சர் ஜயலத் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை (றான்) பிரதேச சபைகளின் தலைவர்களின் பாவனைக்கென முன்னர் வழங்கியிருந்த 'பிக்கப்' வாகனங்களில் இதுவரை மீளளிக்கப்படாத வாகனங்கள் அனைத்தையும் சட்ட நடவடிக்கை மூலம் மீளப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு யாழ்.செயலகத்தில் பிரதேச சபைகளின் செயலர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னர் பிரதேச சபைகளின் தலைவர்களுக்கு வடக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால் வழங்கப்பட்ட 6 'பிக்கப்' வாகனங்களையும் நான் அகதிகள் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சின் கீழ் பொறுப்பேற்கவுள்ளேன். இவற்றில் மூன்று 'பிக்கப்' வாகனங்கள் இதுவரை எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. அதில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் வாகனம் தற்போது நீதிமன்றப் பராமரிப்பில் உள்ளது. அது உரிய முறையில் எமது அமைச்சின் கீழ் பாரமெடுக்கப்படும். அதேபோல வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களும் சட்ட நடவடிக்கை மூலம் எமது அமைச்சின் கீழ் கொண்டு வரப்படும். மீளப் பெறப்படும் இவ்வாகனங்கள் அனைத்தும் வடக்கிலேயே பயன்படுத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் நடைபெற்றால் பின்னர் வரும் பிரதேச சபைகளின் தலைவர்களுக்கு அவ்வாகனங்கள் கையளிக்கப்படும் - என்றார் அமைச்சர்.

(ஒ-8-5)

### கலந்துரையாடல் இடம்மாற்றம்

கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் இடம் பெறவிருந்த கலந்துரையாடல் இருபாலையில் உள்ள கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (ஒ-72)

### சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில்

# தமிழ் மக்களும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டும்!

## மசூதி பொறுப்பாளர் - புலிகள் கூட்டாக கோரிக்கை

திருகோணமலை,ஏப்.23

தமிழ் - முஸ்லிம் மக்கள் வன்முறைகளை நிறுத்தி, சமாதானத்தைக் கட்டியெழுப்ப ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். மூதூர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல் பொறுப்பாளர்களும் விடுதலைப்புலிகளும் கூட்டாக மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

மூதூரில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் கூட்டப்பட்ட சந்திப்பை அடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் குழுவின் திருமலை அலுவலகத்தில் நடந்த இச் சந்திப்பில் மூதூர் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களின் ஐந்து பிரதிநிதிகள், விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐந்து மணி நேரம் தொடர்ந்த இக்கலந்துரையாடலின் பின்னர் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதென தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ தமிழ் பேசும் மக்களும், முஸ்லிம் மக்களும் அச்சம், பீதியின்றி வாழ்வதற்கு, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தல்.

★ இந்த இலக்கை அடைய இரு சாராரும் இணைந்து செயற்படல்.

★ அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம், ஒழுங்கை பாரபட்சமின்றி பேணிப்பாதுகாக்க இரு சாராரும் இணைந்து செயற்படல்.

★ சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுமாறு அதிகார பீடத்திடம் கோருதல்.

★ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை புலிகள் உறுதிசெய்தல்.

(-3)

### சாராயம், பியர் வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

அனுமதியின்றி அதிகளவில் சாராயம் மற்றும் 'பியர்' ஆகியவற்றை வைத திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவரிடமிருந்து யாழ்.நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபாவைக் குற்றப்பணமாக அறவிட்டுள்ளது.

அருளானந்தம், சத்தியேந்திரன் - பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, வீரையா சோமசுந்தரம் - கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இந்த இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டப் பணமும் தலா ஆயிரம்ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ் நீதிமன்ற நீதிவான் ஆர்.பி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஒ-8)

### மிதிவெடி குறித்த கருத்தரங்கு

மல்லாகம்,ஏப்.23

'யுனிசெவ்' ஆதரவில் சர்வோதயம நடத்தும் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிப 4.30 மணியளவில் மல்லாகம் தெற்கு, வடக்கு கிராம சேவகர்கள் பிரிவில் சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதில் மிதிவெடி அபாயம், பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். (ஐ-3)

# ஜயலத்திடம் உதவி கோருகிறது கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ்மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பெருமளவான பொருள் இழப்பிற்கும் சொத்திழப்பிற்கும் உள்ளாகியுள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை நீக்குவதற்கு உதவுமாறு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் யாழ் மாவட்ட விவசாய, நுகர்ச்சிக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பகனகலிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இராணுவ நடவடிக்கைகளினால் 1984 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை 14 லட்சம் ரூபாவும் 2000 ஆம் ஆண்டு 'உகண' கப்பல் மூழ்கடிக்கப்பட்டதால் ஒரு கோடி 84 லட்சம் ரூபாவும் எமது சமாசத்திற்கு இழப்பீடு ஏற்பட்டது. இந்த இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, எமது தேவைகளுக்கேற்ற நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (ஒ8-5)

### மரக்காலை உரிமையாளருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.மரக்காலை உரிமையாளர்கள் மற்றும் பாரிய தச்சுக் கூடங்களின் உரிமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் இடம்பெற்றது.

இத்துறைசார்ந்தவர்கள் எதிர் நோககும் பிரச்சினைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டது. விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் சமகால அரசியல் நிலை குறித்து உரையாற்றினர். (ஐ-3)

# அமெ. இராணுவத் தளபதி பக்தாத் வந்து சேர்ந்தார்

பக்தாத்,ஏப்.23

ஈராக்கில் சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்புப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக அமெரிக்க இராணுவத்தின் ஓய்வு பெற்ற தளபதி ஜோய் கார்னர் திங்கட்கிழமையன்று பக்தாத் வந்து சேர்ந்தார்.

குவைத்திலிருந்து விமானம் மூலம் பக்தாத் வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஈராக் மக்களுக்கு உதவும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.


குடிதண்ணீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகளை மீண்டும் மக்களுக்கு உடனடியாக அளிப்பதே தமது முக்கிய குறிக்கோள் என்றார் அவர்.

ஈராக்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது ஒரு சவாலான காரியம் என்றும் அவர் கூறினார். புனரமைப்புப் பணிகள் முடிவடையும் வரையுமே அமெரிக்கப்படைகள் ஈராக்கில் இருக்கும் என்று குறிப்பிட்ட அவர் அதன் பின்னர் தாம் வெளியேறிவிடுவோம் என்றும் சொன்னார்.

போருக்குப் பின்னர் ஈராக்கைப் புனரமைக்கும் விடயத்திற்கும் ஈராக்கியர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான இடைக்கால நிர்வாக சபையின் தலைவராக ஜோய் கார்னர் இருப்பார். அவருடன் பிரிட்டிஷ் இராணுவத் துணைத் தளபதி டிம் கிராஸும் வந்துள்ளார்.

நேற்று அவர்கள் வடக்கு ஈராக்கில் குர்திஷ்கள் அதிகமாக வாழும் பகுதிக்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

(ம)



வட ஈராக்கில் ஜோய் கார்னர்

# இரு வேறு படகு விபத்துக்களில் 100 பேர் நதியில் மூழ்கிப் பலி!

## பங்களாதேஷில் துயரம்



டாக்கா,ஏப்.23

பங்களாதேஷில் இடம்பெற்ற இரு வேறு பயணிகள் படகு விபத்துக்களில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் டாக்காவுக்கு அருகே உள்ள கிராமம் ஒன்றில் இருந்து புரிகங்கா நதியில் புறப்பட்ட பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்ததில் குறைந்தது 104பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள். மோசமான காலநிலையே இந்த விபத்துகக்குக் காரணம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

மற்றைய விபத்து கிஷோரிகாஞ் மாவட்டத்தில் உள்ள மேகனா என்ற ஆற்றில் இடம்பெற்றது. 50 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்ததில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

திருமண வீட்டுக்கு சென்று கொண்டிருந்தவர்களே அந்தப் படகில் அதிகம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படகு கவிழ்ந்ததும் பயணிகள் பலர் நீந்திக் கரைசேர்ந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். ஆனால், இன்னும் பலரைத் தொடர்ந்து காணவில்லை.

மீட்புப் பணியாளர்களும் பொலீஸாரும் உள்ளூர் மக்களும் தொடர்ந்தும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று மாலைவரை 80 சடலங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

இரு படகுகளிலும் இருந்தவர்களின் சரியான பெயர் விவரப் பட்டியல் இல்லாததால் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதில் அதிகாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதேசமயம், விபத்து நடந்தபோது படகுகளில் எத்தனை பேர் இருந்தனர் என்பதையும் உறுதிப்படுத்த முடியாமல் இருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். எனினும் 200க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த வாரமும் கிஷோரிகாஞ் மாவட்டத்தில் இத்தகைய படகு விபத்து ஒன்று இடம்பெற்றது. அதில் 23 பயணிகள் கொல்லப்பட்டனர்.

பங்களாதேஷில் படகு விபத்துக்கள் நடப்பது ஒன்றும் விசேடமான நிகழ்வு இல்லை. அந்தளவுக்கு அங்கு நதிகளில் படகு விபத்துக்கள் சாதாரணமானவை.

மோசமான காலநிலை மற்றும் படகுகளில் அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றுவது போன்ற பிரச்சினைகளால் அங்கு அடிக்கடி இத்தகைய விபத்துக்கள் இடம்பெற்றுவருகின்றன.

(ம)



ஆற்றில் கவிழ்ந்த படகு ஒன்று அதன் மேல் மட்டத்தில் மிதப்பதையும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள படகு ஒன்று அருகில் நிற்பதையும் மீட்புப் பணியாளர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம். மேலுள்ள படத்தில் உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ள உறவினர்கள்

# பத்து ஆண்டுகளின் பின்னர் பக்தாத்துக்கு விமான சேவை

துபாய்,ஏப்.23

ஈராக்கில் இடைக்கால அரசு அமைந்தவுடன் பக்தாத்திற்கு பயணிகள் விமான போக்குவரத்து விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐநா தடைகள் காரணமாக ஈராக் தலைநகருக்கான பயணிகள் விமானப் போக்குவரத்துக்கள் கடந்த 10 ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்தது. இதனால், அம்மானில் இருந்து வீதி வழியாக 8 மணி நேரம் பயணம் செய்தே பக்தாத்துக்குச் செல்லவேண்டியிருந்தது.

1991 வளைகுடா யுத்தத்துக்கு முன்னர் 60 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்குக்குச் சென்று வந்தன. தற்போது அந்தச் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பிரிட்டிஷ் எயார்வேஸ் நிறுவனம் ஈராக்கில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.

அரபு நாடுகள் சார்பாக இயக்கப்படும் 'தி கல்ப் எயார்வேஸ்' நிறுவனம் பக்தாத்திற்கு விமான சேவைகளை நடத்தத் தயார் நிலையில் இருக்கின்றது. உரிய அனுமதி கிடைத்ததும் வளைகுடாவின் பல்வேறு நாடுகளிலும் இருந்து பக்தாத்துக்கு விமான சேவைகளை நடத்த அந்த நிறுவனம் தயாராகி வருகின்றது.(ம)

உலக அரங்கில்

# ஈராக்கில் நிரந்தர படை முகாம்கள்; மறுக்கிறார் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்

நியூயோர்க்,ஏப்.23

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நீண்ட காலம் தங்கியிருப்பதற்குத் திட்டமிட்டுள்ளன என்று வெளியான செய்திகளை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் மறுத்துள்ளார். அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அமெரிக்காவிடம் இல்லை என்றும் விரைவில் ஈராக்கை விட்டு தமது படைகள் வெளியேறிவிடும் என்றும் அவர் கூறினார்.

சதாமின் வீழ்ச்சியின் பின்னர் நீண்ட காலத்துக்கு ஈராக்கில் நிலைகொள்ள அமெரிக்கப் படைகள் திட்டமிட்டு வருவதாகவும் -

குறைந்தது 4 பலம் மிக்க இராணுவ முகாம்களையாவது அங்கு நிறுவ அமெரிக்க இராணுவம் முடிவு செய்துள்ளதாகவும் -

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ரம்ஸ்பீல்ட் அதற்காக அந்தப் பத்திரிகையை கடுமையாகச் சாடினார்.

"நான் திட்டவட்டமாகச் சொல்கின்றேன், எந்த ஒரு கூட்டத்திலும் ஈராக்கில் நிரந்தர முகாம்களை அமைப்பது குறித்து நாம் கலந்துரையாடியதில்லை" - என்றார் ரம்ஸ்பீல்ட்.

ஈராக்கில் புதிய அரசு ஒன்று அமையும் வரை அங்கு நிர்வாகத்தைச் சீர்ப்படுத்துவதில் அமெரிக்கப் படைகள் உதவி புரியும். அதன் பின்னர் அங்கிருந்து அவை அகன்றுவிடும் என்று ரம்ஸ்பீல்ட் உறுதியளித்தார்.

# 1,000 பேர் புதைக்கப்பட்ட கல்லறை ஈராக்கில்!

பக்தாத்,ஏப்.23

ஈராக்கில் அரசியல் கைதிகளின் சடலங்களைப் புதைப்பதற்காக இரகசிய கல்லறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூட்டுப் படைகள் கூறுகின்றன.

சதாம் ஹுசைனின் ஆட்சியின் போது அவரது அரசியல் எதிரிகள் ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டு இந்தக் கல்லறையில் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் செய்தி நிறுவனமான ஏ.எவ்.பிக்கு வழங்கிய பேட்டியில் அந்தக் கல்லறை நிர்வாகியும் ஊழியர்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

"கல்லறையில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அபுகிரைப் சிறைச்சாலையில் இருந்து ஒரே நேரத்தில் ஆண்கள் அல்லது பெண்களின் 15 சடலங்கள்வரை கல்லறைக்குக் கொண்டுவரப்படும். கடைசியாக கல்லறையில் புதைக்கப்பட்டது 993ஆவது சடலம் ஆகும்.

"அரசியல் கைதிகள் துப்பாக்கியால் சுடப்பட்டோ தூக்கிலிடப்பட்டோ கொல்லப்படுவார்கள். 15 வயது முதல் 30 வயது வரையுடைய கைதிகளே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். 3ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கல்லறை அமைந்துள்ளது" - என்று அந்த கல்லறை ஊழியர்கள் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளனர்.

(ம)

# வடகொரிய அணு உலைகளை தாக்குவதற்கு அமெரிக்கா திட்டம்

## ஆஸ்திரேலியப் பத்திரிகை தகவல்

சிட்னி,ஏப்.23

வடகொரியா தன் அணுவாயுதத் திட்டங்களை கைவிடாவிட்டால் அவற்றின் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்கு அமெரிகா திட்டமிட்டு வருகின்றது.

ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று நேற்று இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. ஆஸ்திரேலிய அதிகாரிகளை மையமாகக் கொண்டே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வடகொரிய அணு உலைகளைத் தாக்குவதற்கான அடிப்படைத் திட்டங்களை (புளூ பிரின்ட்) ஏற்கனவே அமெரிக்கா தயாரித்துவிட்டது என்று அந்தப் பத்திரிகையின் உலகச் செய்திகளுக்கான ஆசிரியர் தெரிவித்தார்.

தென்கொரிய எல்லையில் மலைப் பகுதியில் உள்ள வடகொரியாவின் கனரக ஆட்லறிகளையும் விமானத் தாக்குதல் நடத்தி அழிப்பதற்கும் அமெரிக்கா திட்டமிட்டுவிட்டதாகவும் அவர் கூறினார்.

தென்கொரியாவின் தலைநகர் சியோலிற்கு இந்த ஆயுதங்களால் ஆபத்து என்ற காரணத்தாலேயே அவற்றை தகர்த்துவிட அமெரிக்கா முடிவுசெய்ததாகவும் அவர் சொன்னார்.

வடகொரியா கடந்த ஆண்டு இறுதியில் தன் அணுவாயுதத் திட்டங்களை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்தது குறித்து சீனா, வடகொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் முக்கிய மாநாடு ஒன்று சீனத் தலைநகர் பீஜிங்கில் வெகுவிரைவில் நடைபெறவுள்ள நிலையில் இந்தச் செய்தி வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தி உண்மையற்றது என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் தெரிவித்தார். அமெரிக்கர்கள் எந்தவழியிலான இராணுவ நடவடிக்கையையும் எடுக்கக்கூடும் என்றும் அவர் கோடிகாட்டினார்.

(ம)



பக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள பலஸ்தீனிய ஹோட்டலின் முன்பாக ஷியா இன முஸ்லிம்கள் நேற்று அமெரிக்கர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# அடிப்படையான ஐக்கியம்கூட இல்லாமல் பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டு சாத்தியமா?

## 'யுத்தம்மூலம் சமாதானம்' என்ற நிலைப்பாட்டில் மாத்திரம் ஏகோபித்த ஒருமைப்பாடு

இந்தியா சென்று நான்கு முக்கிய தலைவர்களைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான முன்னெடுப்புகள் பற்றி உரையாடிவிட்டு ஜனாதிபதி குமாரதுங்கா நாடு திரும்பியுள்ளார்.

உண்மையில் தமது புதிய கூட்டுக்கு ஆசிபெற்று வந்தாரா அல்லது



சமஷ்டிக்கும் சமாதானத்திற்கும் ஆப்பு வைத்து விட்டுத் திரும்பினாரா என்று அறிய மக்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், பொ.ஐ.முவும் ஜே.வி.பியும் ஒரு காந்தப் புலத்தினுள் அகப்பட்டு இருப்பது என்னவோ உண்மை போலத்தான் தெரிகிறது.

ஹட்டன் - டிக்கோயா மாடிவீட்டுத தொகுதியை திறந்து வைத்த பிரதமா ரணில் விக்கிரமசிங்க, "ஜே.வி.பி.யினரை ஒதுக்கி வைத்து விடக்கூடாது என்று நினைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிறைகளை திறந்து விட்டார். அவர்கள அரசியலில் ஈடுபடவும், தேர்தலில் போட்டியிடவும் நாம் சந்தர்ப்பம் கொடுத்தோம். அன்று அதனைப் பலரும் எதிர்த்தனர். ஆனால், ஜே.வி.பியினர் அதன் பலனை இன்று அனுபவிக்கின்றனர். இந்த அடிப்படையில்தான் நாம் புலிகளுடனும் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டோம். இதனால் எல்லோருக்கும் தேவையான சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளோம்" - என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "ஜே.வி.பியினர் இந்த நாட்டுப் பொருளாதாரத்தை அடியோடு அழித்தவர்கள். அரசியல்வாதிகளையும், ஆசிரியர்களையும், மதத்தலைவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் கொன்று குவித்தவர்கள். கதிர்காமத்தையும் தலதா மாளிகையையும் தாக்கியவர்கள், பொலீஸாரையும் இராணுவத்தினரையும் கொன்றவர்கள். ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையில்லாதவர்கள்" எனவும் புட்டு வைத்தார்.

கடந்தகால வரலாறு இவ்வாறு இருந்தாலும், எதிர்காலத்தில் ஜே.வி.பியினர் சமாதானத்தைத் தவிடுபொடியாக்கும் வல்லமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது ஆச்சரியம் தரும் உண்மையாகும்.

ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பை எரிமலைபோல் கக்கிய இவர்கள் இன்று சமஷ்டிக்கும், சமாதானத்திற்கும் தெரிவிக்கும் எதிர்ப்பு காரணமாக, பொ.ஐ.முவையும் முந்திக்கொண்டு புதுடில்லியின் செல்லப்பிள்ளைகளாகி விடவும் வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

### 90சதவீத உடன்பாடு

ஜனாதிபதி புதுடில்லிக்கு செல்வதற்கு முன்னர் பொ.ஐ.முவுக்கும், ஜே.வி.பியுக்குமிடையிலான கூட்டு பற்றி அடிக்கடி பேச்சுக்கள் நடைபெற்றன. 90சதவீத விடயங்களுக்கு இருதரப்பும் உடன்பாடு கண்டு விட்டன என்று பெருமையுடன் பேசப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்த வரைவுகள பரிமாறப்பட்டன. இனிமேல் ஒப்பமிட்டு ஏற்றுக்கொள்வதுதான் பாக்கி என்றும் பேசிக்கொண்டனர். ஆனால், முக்கியமான ஒரு விடயத்தை மட்டும் வசதிகருதி ஒத்தி வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். இதற்குள் புதிர் இருக்கும் போல் தெரிகிறது.

"ஜே.வி.பி. பேச்சுக்கள் மூலமாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறது" என்னும் நிலைப்பாட்டை மொட்டையாக உச்சரிக்கிறார்கள். அதற்குமேல் அதன் நிலைப்பாட்டை பொ.ஐ.மு.வட்டாரங்கள் விமர்சிக்காமல் விட்டுவிடுகின்றன. விமர்சிக்க விரும்பாத பகுதி இதுதான். ஜே.வி.பி. சமஷ்டிக்கு, அதிகாரப் பரவலாக்கத்துக்கு சம்மதிக்கவில்லை.

இது தொடர்பான ஜனாதிபதியின நிலைப்பாடு வித்தியாசமானது. அதாவது, 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. சர்வதேசத்தின் கண்களுக்கு நல்லாட்சி நடப்பதாக காட்டிக்கொள்ள வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருக்கின்றார்.

மேற்படி நிலைப்பாடுகளின்படி மேற்படி இரண்டு முன்னணிகளுக்குமிடையில் அடிப்படை ஐக்கியம் கூட இல்லை என்பது தெரிகிறது. இவ்விடயத்தில் மேன்மேலும் பேச்சுக்கள நடத்தி வேறுபாடுகளுக்கு தீர்வு காணும் நோக்கிலான முயற்சிகள் தீவிரமாக நடைபெறுவதாகவும் இல்லை.

ஆனாலும், கூட்டு ஒப்பந்தம் மே மாதத்தில் ஒப்பமிடப்படும் என்று ஜே.வி.பி., பொ.ஐ.மு. தலைவர்கள் தெரிவித்து வருகின்றார்கள்.

அதாவது, இணக்கம் காணப்பட முடியாத விடயங்களை அப்படியே புறந்தள்ளிவிட்டு ஆட்சியை அமைப்பதற்குத தேவையான எம்.பி.க்களின் எண்ணிக்கையில் மட்டும் கண்ணாய் இருக்கிறார்கள் போல் தெரிகிறது.

புலிகள் எதிர்ப்பு முன்னணி ஒன்றை அமைத்து, அதனை ஆட்சியை நோக்கி நகர்த்திச் செல்வதே உடனடித தேவை என இனங் கண்டிருக்கிறார்கள். இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களைப் பின்னர் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று வசதிகருதி சிந்திப்பதற்கும் இடமுண்டு. இவ்விரு தரப்பினருமிடையே இவ்விடயத்தில் ஏற்படும் புரிந்துணர்வுக்குக் காரணங்களும் இருக்கலாம்.

### யுத்தம் மூலம் சமாதானம்

அதிகாரப் பரவலாக்கம், பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற வகையில் அலங்காரமாக வார்த்தைகளை உச்சரித்தாலும், பொ.ஐ.மு.ஆட்சிக்கு வருமாயின் போர் மீண்டும் தொடங்குவது நிச்சயம் என்று வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு ஜே.வி.பி. நம்புவதாக இருக்கலாம்.

சண்டையையும் தொடக்கி சமாதானம் என்னும் சொல்லையும் பயனபடுத்தும் வகையில் முன்னைய ஆட்சியின் போது "யுத்தம் மூலம் சமாதானம்" என்று பிரசாரம் செய்யப்பட்டது என்பதை ஜே.வி.பி. நன்கு அறியும்.

அவ்வாறின்றி, சண்டை ஒரு புறமும் சமாதானப் பேச்சுக்கள் மறுபுறமும் ஏக காலத்தில் நடைபெறுவதாகக் காட்டிக்கொள்ளும் திறமை தமக்கிருப்பதாக ஜே.வி.பி. கருதக்கூடும்.

மாறாக, தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக சுயநிர்ணய உரிமையிலிருந்து இன்றைய நிலை வரை ஜே.வி.பி பல நிலைப்பாடுகளை எடுத்திருந்த வரலாற்றை பொ.ஐ.மு ஆராய்வதாக இருக்கலாம்.

ரோஹணவிஜயவீர காலத்திலிருந்து ஜே.வி.பி எடுத்த நிலைப்பாடுகள் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொரு விதமாக இருந்ததை அவர்கள் நம்பிக்கையோடு நோக்குவதாயிருக்கலாம்.

ஜே.வி.பியினர் அவ்வப்போது வெளியிட்டவைகள் மட்டுமன்றி லயனல் போபகே போன்றவர்கள் இப்போதும் வெளியிடும் கருத்துக்கள் ஜே.வி.பி. மீண்டும் ஒருமுறை தமது கொள்கையை மாற்றக்கூடும் என்ற நம்பிக்கையை பொ.ஐ.முவுக்கு ஊட்டுவதாய் இருக்கலாம்.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்ற வகையில் இந்த இரண்டு அணியினரும் கொண்டிருக்கக்கூடிய புரிந்துணர்வே அவர்களின் ஒப்பந்தத்துக்கு அடிப்படையாக இருக்கக்கூடும்.

முக்கியமான இந்த விடயத்தை வெற்றிடமாக விட்டுவிட்டு, பிரதான நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் முன்னேறுவதையே சூழ்நிலை தூண்டுகிறது. இது அவர்களுக்கு ஒரு நிர்ப்பந்தமாகவும் இருக்கிறது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகள் புலிகளின் ஆளுகையின் கீழ் வருவதையே இந்தியா விரும்பவில்லை. அவ்வாறு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதைத் தடுப்பதில் அது கவனமாக இருக்கிறது.

சமஷ்டி பற்றியும் முரண்பாடு உள்ளது. புதிய அரசாங்கம் ஒன்று அமைந்து அது புலிகளுடன் பேசுவதாயினும் அதனைப் புதுடில்லியின் அதிகாரபீடம் ஏற்றுக்கொள்ளுமா என்பது தெரியவில்லை.

### ஜனாதிபதியின் முயற்சி

இவை பற்றித் தெளிவடையவும ஆலோசனைகள் நடத்தவும் இந்தியாவின் நெருங்கிய நட்பையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள தொடர்பில் ஆதரவைப் பெறவுமே ஜனாதிபதி முயன்றிருக்கக் கூடும்.

ஜே.வி.பிக்கும் பொ.ஐ.முவுக்கும் இடையில் நட்பு ஒருபுறம் இறுக்கமடைகிறது. இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் அவைகளுக்கிடையிலான வேற்றுமையே ஒற்றுமையாக மாறி வருகின்றது.

பொ.ஐ.மு.இந்தியாவின் நட்பை நாடிச் சென்ற வண்ணம் இருக்கிறது. முதலில் ஆலோசகர் அனுராபண்டாரநாயக்காவும் மங்கள சமரவீரவும் சென்று திரும்பினர்.



அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சென்று உரையாடித் திரும்பியிருந்தார். இப்பொழுது ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இன நெருக்கடிக்கான தீர்வு விடயம் இந்தியாவின் பிடியிலிருந்து விலகி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கைகளுக்குள் சென்றுவிடாது தடுப்பதில் புதுடில்லிக்கு இருக்கும் ஆர்வத்துடன் கைகோத்துச்செயற்படும் அணி ஒன்றின் உறுதியான உருவாக்கம் நடைபெற்று வருகின்றது.

ஐதே.மு.அரசுக்கும் விடுதலைப்

**கலைவாணன்**

புலிகளுக்கும் ஜப்பான், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான ஒருமித்த போக்கிற்கு எதிராகத் தென்னிலங்கையின் சக்திகளை வலுப்படுத்த வேண்டிய அவசரம் இந்தியாவுக்கும், பொ.ஐ.மு. தலைமைக்கும் ஜே.வி.பி.க்கும் வேறுஞ் சில சக்திகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரதம ரணில் விக்கிரமசிங்க கூறியது போன்று கதிர்காமத்துக்கும் தலதா மாளிகைக்கும் மட்டுமன்றி எதிர்காலத்தில் ஐக்கிய இலங்கைக்கே ஆபத்துக் காத்திருக்கிறது என்று கூறலாம்.

# வரணி-குடத்தனை வீதியின் ஒரு பகுதி 40 ஆண்டுகளாக திருத்தப்படவில்லை!

வரணி-குடத்தனை பிரதான வீதி சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால அமைக்கப்பட்டது. இவ்வீதி வரணி-கொடிகாமம் பிரதான வீதியில் ஆரம்பித்து இடைக்குறிச்சி மாசேரி பிரிவு கூடாக குடத்தனை ஆறாம் கட்டையில் பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியை சென்றடைகின்றது.

இவ்வீதியின் ஒரு பகுதியை வரணிப் பிரதேசத்தில் இருந்து

**செய்திக் கட்டுரை**

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு வீதி அபிவிருத்தித் திணைக்களம் புனரமைத்தது. மீதிப்பகுதி மறு ஆண்டு புனரமைக்கப்படும் என தெரிவித்த திணைக்களம், அதற்குரிய அளவீடுகளையும் மேற்கொண்டது. ஆனால், இரண்டு வருடங்கள் கடந்தும் வீதி திருத்தப்படும் அறிகுறிகள் தென்படவே இல்லை.

மேலும் இந்தக் குறை வீதியைப் புனரமைக்கும்படி அதற்குரிய காரணங்களைத் தெரிவித்து வரணி மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கம் மகஜரொன்றை அக்காலகட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியில் இயங்கிய நடமாடும் சேவையில் உரிய திணைக்களத்திடம் கையளித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது - அத்துடன் திருத்தப்பட்ட அதேபகுதி இதற்கு முன் பல ஆண்டுகள் இடைவெளியில் இரண்டு முறை திருத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

திருத்தப்பட்ட வீதியை மீண்டும் மீண்டும் திணைக்களம் புனரமைக்கின்றதே தவிர, திருத்தப்படாத 2 கிலோ மீட்டர்கள் பகுதியை ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை திருத்தப்படாமை வியப்பையளிக்கிறது. இத்திருத்தப்படாத வீதி கிராமப் பகுதி முடித்து சிறிய காடு ஊடாகச் செல்லும் அதேவேளை, இப்பகுதி தரைமட்டத்துடன் சமமான நிலையில் உள்ளது. சவர் நிலப்பிரதேசமான இப்பகுதியில் மாரி காலத்தில் மழை வெள்ளம் வீதிக்கு மேலாகப் பாய்வதால் கற்கள் அரிக்கப்பட்டு வெறும் சவர் நிலப்பாதையாகவே இன்றும் உள்ளது. பாதசாரிகள் நடந்து கூடப் போகமுடியாத நிலையில் இவ்வீதி குடத்தனை, அம்பன், நாகர்கோவில், மருதங்கேணி மக்கள் தென்மராட்சிப் பகுதிகளான கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குப் பயணம் செய்யக் கூடிய குறுகிய பாதை ஆகும்.

இதுதவிர, குடத்தனை, மணல்காடு ஆகிய பகுதிக் கடற்றொழிலாளர்கள் தமது மீன் வியாபாரத்துக்கு வரணி, கொடிகாமம், சாவகச்சேரி போன்ற பிரதான சந்தைகளுக்கு போவதற்கு பயன்படுத்தப்படும் பாதையும் இதுவாகும்.

அதேவேளை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இருந்து மீன் கொள்வனவுக்கு வரும் வியாபாரிகள பயன்படுத்தும் பாதையும் இதுவாகும்.

மேலும் இந்தத் திருத்தப்படாத பகுதியில் இரண்டு சிறிய மதகுகளும் ஆறுகண மதவு ஒன்றும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன. உடைந்த சிறிய மதகுகள் தற்சமயம் மண்ணினால் மூடப்பட்டு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆறு கண்மதவும் கற்களால் நிரம்பப்பட்டுள்ளது.

மாரிகாலத்தில் பாயும் வெள்ள நீர் இப்பாலத்துக்கு மேலால் பாய்வதாலேயே பாலம் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. தற்சமயம் வரணி

**வரணி செய்தியாளர்**

பிரதேச சீருடைப் பிரிவினர் இப்பாதையினூடாகவே வடமராட்சி கிழக்கு பகுதிக்கு பயணம் செய்கின்றனர். பாரவாகனங்களும் இப்பாதையையே பயன்படுத்துகின்றன. கடந்த கால போர் நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மிருசுவில், குடமியன், எழுதுமட்டுவாழ், நாவற்காடு, இடைக்குறிச்சி, மாசேரி ஆகிய பிரதேச மக்கள் வடமராட்சியை நோக்கி தமது பொருள்களுடன் இடம் பெயர்ந்ததும் இப்பாதையூடாகவே ஆகும்.

எனவே, இப்பாதையின் முக்கியத்தை கருத்திற்கொண்டு - உடனடியாக இப்பாதையை புனரமைக்க - உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ☆

# வலி.வடக்கு பிரதேசத்தில் மரவேலைப் பயிற்சி

வலி.வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினர் மரவேலைப் பயிற்சியினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

6மாதங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறியில் பங்குகொள்ள விரும்பும் வலி.வடக்கினைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தங்கள் பெயர்களை தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் திட்டமிடல் கிளையில் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை - வெற்றிடங்கள்**

**பாதுகாவலர்கள்**

**(30 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள்)**

**WALK IN INTERVIEW**

தகைமைகள் G.C.E. (சா/த) சித்தி

22 வயது தொடக்கம் 55 வயதுவரை

(பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)

மார்பு 32" குறையாமல்

உயரம் 5'4" குறையாமல்

(நல்ல தேகாரோக்கியமும் கண்பார்வையும் இருத்தல் வேண்டும்)

நேர்முகப் பரீட்சை:- கிழமை நாள்களில் பி.ப.5.00மணி தொடக்கம் 6.30 மணிவரை சனிக்கிழமை காலை 9.00மணிதொடக்கம் 12.00 மணிவரை

ஆவணங்கள் :

1) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்
2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3) தே.அ.அட்டை
4) வி.அ.அட்டை

பணிப்பாளர்.

43, கல்லூரி வீதி
(யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

(சி-27514)

# உதயன்

## பந்து இப்போது அரசின் பக்கத்தில்!

எப்போது நடக்கும் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தது இப்போது நடந்துவிட்டது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அரசுத் தரப்பின் பொறுப்பற்ற செயற்பாடுகள், இணக்கம் காணப்பட்ட - உடன்பாடு செய்துகொள்ளப்பட்ட - விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வந்தமை போன்ற நடவடிக்கைகளால் சமாதான முயற்சிகளுக்கு எந்நேரமும் பங்கம் ஏற்படலாம் என்ற பதகளிப்பு மக்கள் மனதில் இருந்தே வந்தது.

அதனையே நேற்றுமுன்தினம் இப்பத்தியில் 'நெருக்கடிக்கு உள்ளாகும் சமாதான முயற்சிகள்' என்ற தலைப்பில் விவரித்திருந்தோம்.

சமாதான நடவடிக்கைகளை இவ்வாறு இழுபறிககு உள்ளாக்குவது கடைசியாக மக்களுக்கு சமாதானமும் அமைதியும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையையே தோற்றுவிக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

நாம் எச்சரிக்கைத் தகவலை எழுதிய மை காய்வதற்குள் - அடுத்த 48 மணி நேரத்துக்குள் - சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்பட்டிருப்பது பற்றிய செய்தி வெளியாகியிருக்கின்றது.

சமாதானப் பேச்சுக்களில் இப்போதைக்கு பங்குபற்றுவதை இடைநிறுத்தும் - மன உளைச்சல் தரும் முடிவுக்குத் தாங்கள் தள்ளப்பட்டிருப்பதை புலிகள் அறிவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனினும், இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் அரசியல் தீர்வு காண்பதில் தமக்குள்ள உறுதிப்பாடடை புலிகள் மீளவும் வலியுறுத்தியிருப்பது ஆறுதல் தரும் அம்சம்.

இந்த அம்சத்தை மீள உறுதிப்படுத்தியிருப்பதன் மூலம் தங்களது பொறுப்புணர்வை புலிகள் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அடுத்து இனி என்ன என்பதுதான் பலரது மனதிலும் எழும் கேள்வி.

பிரதமர் ரணிலுக்கு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தாம் அனுப்பிய கடிதத்தில் மூன்று முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

★ யுத்தத்தால் அழிந்துபோயுள்ள நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான சர்வதேச நிதி உதவியை இணைந்தும் - சம பங்களிப்புடனும் - கோருவது என அரசும் புலிகளும் முடிவு செய்திருந்தனர். ஆனால், இந்த முயற்சியில் அரசு தற்போது புலிகளை ஓரங்கட்ட முயல்கின்றது.

★ வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த அகதிகளை மீள்குடியமர்த்துவது, அதற்கு வசதியான நடவடிக்கையாக மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்திருக்கும் துருப்புக்களை அங்கிருந்து விலக்குவது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு காலவரையறையுடன் கூடிய உடன்பாடுகளை அரசுத் தரப்பினரும் புலிகளும் கண்டிருந்தனர். ஆனால், உரிய காலம் கடந்தும் அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறிவருகின்றது.

★ இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு பிழையான படத்தை இலங்கை அரசு வெளிப்படுத்தி நிற்கின்றது. வடக்கு - கிழக்கின் யதார்த்த புறச்சூழ் நிலையை ஒதுக்கிவிட்டுத் தென்பகுதி வறுமையை - அதற்கான காரணங்களையும் மூடி மறைத்துவிட்டு - அரசு முன்னிலைப்படுத்துகின்றது.

- இவை புலிகள் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள்.

இந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசுத் தரப்பு எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் பேச்சு முயற்சிகள் இனிமேல் முன்னகரும் என்பது வெள்ளிடைமலை.

இப்போது பந்து அரசின் களத்தில்.

அரசின் ஏமாற்றுப்போக்கால் சினமுற்றிருக்கும் புலிகள் தங்கள் அதிருப்தியையும் விசனத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில் ஆக்ரோஷத்துடன் பந்தை அரசின் பக்கத்துக்கு அடித்திருக்கின்றார்கள்.

அரசு எப்படிப் பதிலளித்து ஆடப்போகின்றது என்பதில்தான் 'சமாதான நடவடிக்கைகள்' என்ற இந்த விளையாட்டின் எதிர்காலப் போக்குத் தங்கியிருக்கின்றது.

## தலைவர் பிரபாகரனுக்கு ஆனையிறவு வெற்றி விருது

### யாழ். இளைஞர்கள் சமர்ப்பிப்பர்

சாவகச்சேரி,ஏப்.23

ஆனையிறவு இராணுவ முகாமை வெற்றிகொண்ட நினைவு நாளையொட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நினைவு விருதினை யாழ்.இளைஞர்கள் வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கான வெற்றி நாள் விருதினை யாழ்ப்பாண இளைஞர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி பளையில் இடம்பெறவுள்ள வெற்றி விழாவில் புலிகளின் முக்கிய தளபதிகளிடம் கையளிக்கவுள்ளனர்.

இந்த நினைவு விருதினை இளைஞர் குழுக்கள் அஞ்சல் ஓட்டமாக கையில் தாங்கியவாறு எடுத்துச்செல்லவுள்ளனர். இந்த அஞ்சல் ஓட்ட நிகழ்வு யாழ்.செயலக முன்றிலில் இருந்து ஆரம்பிக்கவுள்ளது. விருதினை எடுத்துச்செல்லும் இந்த அஞ்சல் ஓட்டத்தில் குறிப்பிட்ட தூரங்களில் இருந்து வெவ்வேறு இளைஞர்கள் இந்த நினைவுப் பரிசிலைத் தாங்கிச் சென்று ஒப்படைக்கவுள்ளனர். (ஒ-31)

## நாட்டு நடப்பு

### அப்பீலுக்கு எங்கு போவேன்?

பத்தாண்டு விரதம் பூண்ட -
பகவதிக்கோ பிள்ளை யில்லை
ஆண்டிற்கு ஒரு குழந்தையாக
ஆனந்தி பெறுகின்றாளே!
குலமகள் குணவதிக்கோ
குழந்தைகள் எட்டும் பெட்டை
அருந்ததி பெற்றாள் ஆறு
அனைத்துமே ஆணாய்ப் போய்ச்சு
நீதியே இறைவன் என்று
நினைவூட்டினார் வாத வூரர்
அநீதியை இறைவன் செய்யின்
அப்பீலுக்கு எங்கு போவேன்?.

- விகடகவி.

### மற்றைய தமிழ் எம்.பிக்களுக்கு விடுவது போன்றே

## கூடிப் பேச அழைப்பு விடுக்கின்றோம்; வெளிநாடு பறக்கிறார் ஆனந்தசங்கரி

### மாணவர்கள் கேள்விக்கு தங்கன் பதில்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் சந்திக்கின்ற ஒவ்வொரு தடவையும் ஏனையோரைப் போலவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

ஆனால், ஒவ்வொரு தடவையும் அவர் தானே ஏதாவது வேலைகளை ஏறபடுத்திக்கொண்டும் தனது சொந்த விடயங்களுக்காகவும் ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு பறந்துவிடுகின்றார். இப்படி கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன்.

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமகால அரசியல் நிலைவரம் தொடர்பான கருத்தரங்கின்போது மாணவர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

கருத்தரங்கின் நிறைவில் மாணவர்களின் கேள்விகளுக்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் விடையளித்தனர்.

அப்போது விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடுகின்ற வேளைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஏன் அதில் கலந்து கொள்வதில்லை? அவருக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுவதில்லையா? என்று மாணவர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விக்கு தங்கன் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:-

உலக நாடுகள் பலவும் எம்மை அங்கீகரித்து எமது சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையும் அக்கறையும் காட்டி வருகின்றன. இந்தவேளையில், சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காக தென்னிலங்கையில் சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த வேளையிலேயே ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை அவதானத்துடனும் பொறுப்புடனும் வெளியிடவேண்டும். சமாதானத்துக்கு எதிரான சக்திகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் எவரும் கருத்துக்களை வெளியிடாமல் இருக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரிக்கு நாங்கள் ஏனைய எம்.பிக்களைப் போலவே கூடிப் பேச அழைப்பு விடுத்து வந்தோம். ஆனால் அவர் ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு காரணத்தை கூறிவிட்டு வெளிநாடு சென்று விடுகிறார்.

இனியும் கூட அவர் ஏனைய எம்.பிக்களை போல எம்மைச் சந்திக்க வந்தால் எமது மக்களுக்காக - எமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் முகமாக - ஏனையோரைப் போல அவரையும் வரவேற்று பேசுவோம் - என்றார் அவர். (ஒ-4)

## சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தரப்போவதில்லை

### ஜே. வி. பி. அறிவிப்பு

கொழும்பு,ஏப்.23

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்குத் தாம் ஒருபோதும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

தமதுகட்சி தேசப்பற்றுடைய கட்சி எனவும் - எனவே, நாடு பிளவுபடுவதற்கு ஒருபோதும் தாங்கள் உறுதுணையாக இருக்க மாட்டோம் என்றும் - ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி செய்துவருகின்றார். ஆனால், அது ஒருபோதும் சாத்தியப்படாது எனவும் அவர் தெரிவித்தார். (ம-4)

## கொழும்புத்துறை கிழக்கு மக்கள் அடிப்படை வசதியின்றித் தவிப்பு

அரியாலை,ஏப்.23

கொழும்புத்துறை கிழக்கு பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மின்சார விநியோகம், குடிதண்ணீர் வசதி போன்றவை அப்பகுதிக்கு இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால, அப்பகுதி மக்கள் இக்கட்டான நிலையினை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

மின்சாரம் இன்றி இப்பகுதி இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்படுவதாகவும் - குடிதண்ணீருக்காக தூர இடங்களுக்கு சென்று அலைய வேண்டியிருப்பதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-17)

## பனை, தென்னை தறிப்பதற்கான அனுமதி நேரில் பார்வையிட்டே வழங்கப்படும்!

### மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் தெரிவிப்பு

கொக்குவில்,ஏப்.23

எமது பிரதேசத்தில் உள்ள பனை மரங்களை வெட்டுவதற்கு நேரில் பார்வையிட்டே அனுமதி வழங்கப்படும். தனியார் காணிகளில் உள்ள பனைமரங்களை வெட்டுவதற்கு காணி உரிமையாளர்களுக்கு கிராம அலுவலரின் சிபாரிசு வந்தபின்னர் பிரதேச இணைப்பாளர் பார்வையிட்டு அனுமதி வழங்கப்படும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஞானவேல், ஊர் காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற பிரதேச விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல் கிளறுதல், மண் அகழ்தல, மரங்களைத் தறித்தல் என்பவற்றால் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. இவை பாதுகாக்கப்படவேண்டும். இதற்காக யாழ்.மாவட்டத்தில் சூழல் குழுக்கள் அமைக்கப்படும். மா, பலா, வேம்பு போன்ற மரங்கள் வெட்டப்படும்போது மேலுள்ள நடைமுறை பின்பற்றப்படும். வரி அறவிடுவதால் புகையிலை போன்ற பொருள்களை தெற்குக்குக் கொண்டு சென்று விற்பது கடினமாக உள்ளது என சம்மேளப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதனைக் கவனத்தில் கொண்டு இந்த வரி பற்றி மீளாய்வு செய்யப்படும். தென்னையில் 'மைற்' நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனை சமகாலத்தில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைத் தெரிவுசெய்து நடைமுறைப்படுத்துவதே சிறந்தது.

நுணுகலையிலுள்ள தென்னை ஆராய்ச்சி நிலையம் போன்று எமது பிரதேசத்திலும் எமது சூழலுக்கு ஏற்றவகையில் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு வசதியாக ஒரு தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவேண்டும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தென்னை வளத்தை மேம்படுத்துவதற்கான மானியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைப் பயனாளிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்று யாழ். மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் தெரிவித்தார். (ஒ-76)

### நாளை

சித்திரை 11
வியாழக்கிழமை
24.04.2003
திதி : அட்டமி
முற்பகல் 11.10 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு 12.51 வரை
சுபநேரம் : 7.30 - 9.00
ராகுகாலம் : 1.30 - 3.00
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வெறுமையான தலைகளே நீண்ட பட்டங்களை விரும்புகின்றன.

# இலங்கையின் தற்கால அரசியல் நிலைமை புதிதாக ஒரு பாதைக்குத் திரும்புமா?

**அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திறமையற்ற அதிகாரிகள் காரணமாயிருக்கிறார்கள். ஜூன் மாதத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் உதவிகள் கிடைத்த பின்னரும் திட்டங்களை தீவிரமாக நிறைவேற்ற அரசுக்கு முடியாவிடின் பொ.ஐ.முன்னணி அரசுக்கு நேர்ந்தகதியையே அரசு சந்திக்க நேரிடும் என்கிறார் கட்டுரையாளர் ரன்சித் ஆனந்த ஜயசிங்கா. லங்காதீப நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

இன்று இந்தநாட்டின் நிர்வாகம் அரசியல் கலப்பு நிறைந்த ஒன்றாகவே விளங்குகிறது. இது ஐ.தே.கட்சி அரசு மற்றும் பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த ஜனாதிபதி ஆகிய இரு வேறு தரப்பினரால் நிர்வகிக்கப்படுகிறது. முன்னொரு தடவை 1994 ஆம் ஆண்டில் இவ்வாறானதோர் அரச நிர்வாக நடைமுறையின் அனுபவம் எமக்குக் கிட்டியுள்ளது. அது முன்



னாள் ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க மற்றும் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் பதவியிலிருந்த ஒரு சந்தர்ப்பத்தின் போதாகும். ஆயினும் அது குறுகியதொரு காலத்துக்கு மட்டுமே இடம் பெற்றது. ஆனால், தற்போதைய அரசியல் நிலை ஆகக் குறைந்தது இன்னும் இரண்டாண்டு காலத்துக்காவது - அதாவது ஜனாதிபதி சந்திரிக்காவின் இப்பதவிக் கால முடிவு வரையாவது - இதே விதத்தில் தொடர இடமுண்டு. இவ்விதமான கலப்பு நிர்வாக முறையை அரசியல் நடவடிக்கைகள் குறித்து விமர்சித்துக் கொள்ளும் கடும் கோட்பாட்டுக் கொள்கையாளர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எங்கள் அரசு என்பதுடன் எங்கள் ஜனாதிபதி என்ற விதமான சிந்தனையே அவர்களது நிலைப்பாடாகும்.

ஐ.தே.கட்சி மற்றும் பொ.ஐ.முன்னணி ஆகிய இரு தரப்பிலும் இவ்வித எண்ணம் கொண்டோர் உள்ளனர். இவர்கள் சுமுகமானதோர் அரசியல் நிர்வாகம் இடம்பெறுவதை விரும்பாதது மட்டுமல்ல, அவ்வித அரசியல் நிர்வாகம் இடம்பெறுவதை விஷமென எண்ணும் தன்மை கொண்டவர்களாவர். ஆனால், இது எமது நாடென்ற பற்றோடும், விசுவாசத்தோடும் சிந்திப்பவர்களும், தேசிய நோக்குடன் அரசியலில் ஈடுபட்டுள்ளோரும், வரலாறு உருவாக்கித் தந்துள்ள இக் கலப்பு நிர்வாக நடைமுறை நம் நாட்டுக்கு நற்பயன் அளிக்கத் தக்கதென நம்புகின்றனர். இத்தகைய அடிப்படையில் தேசிய அரசொன்றினை உருவாக்கும் எண்ணம் மீண்டும் தலையெடுத்துள்ளதாகத் தெரிகிறது. உண்மையில் ஐ.தே.முன்னணி அரசும், பொ.ஐ. முன்னணியும் தேசிய அரசொன்றினை உருவாக்கும் விடயத்தில் தமக்கிடையேயான பேதங்களை - ஆகக்குறைந்தது இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலாவது - புரிந்துணர்வோடும் இணக்கப்பாட்டோடும் செயற்படும் விதத்தில் அரசியல் நாட்டில் அமைந்திருத்தல் வேண்டும்.

இதனிடையே கடந்த சில காலமாக ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்ட நாடகமான பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையேயான கூட்டு எதிர்வரும் மே மாதமளவில் அரங்கேறும் என பொ.ஐ.முன்னணித் தலைவர்கள் கூறிவருகின்றனர். அவ்விதம் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பி யினருக்குமிடையேயான உறவுவலுப் பெறுமானால் பொ.ஐ.முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையே சுமுக உறவு தோன்றக் கூடிய வாய்ப்பு அற்றுப் போய் விடும். ஏனெனில் இவ்விரு தரப்பினருக்குமிடையே இது வரையில் எவ்வித விட்டுக்கொடுப்புக்களோ, இணக்கப்பாடோ, மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், பொ.ஐ.முன்னணியுடன் தாம் கூட்டு வைத்துக் கொண்டாலும், அது குறுகிய தொரு காலத்துக்கு மட்டுமே பேணப்படுமெனவும், ஐ.தே.கட்சியின் நிர்வாகத்தை வீழ்த்துவதை நோக்கமாகக் கொண்டே இக்கூட்டை பயன்படுத்துவோமெனவும் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இவ்விரு தரப்பினருக்குமிடையேயான கூட்டுப் பற்றி பொ.ஐ.முன்னணியின் கனிஷ்ட உறுப்பினர்கள் பல தரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவித்து வரும் இவ்வேளையில், ஜனாதிபதி சந்திரிக்கா இது தொடர்பான தமது உறுதியான கருத்தை இதுவரையில பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. இதனிடையே சர்வதேச ரீதியில் பிரபல்யமான வர்த்தகர் ஒருவரின் ஏற்பாட்டில் ஐதேகட்சிக்கும், பொ.ஐ.முன்னணிக்கும் இடையே இணக்கப்பாடு குறித்த பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இப்பேச்சுக்கள் பெரும்பாலும் இரகசியமாகவே இடம் பெற்றமையால் அவை பற்றிய சரியான விவரமெதுவும் இது வரையில் வெளிவரவில்லை. இதன் காரணமாக இவ்விரு தரப்பினரிடையேயும இணக்கப்பாடு எட்டப்படுமென ஒரு தரப்பினரும், இம் முயற்சி தோல்வியிலேயே முடிவுறுமென மற்றொரு தரப்பினரும் பிரசாரம் மேற்கொண்டு வருவதை மட்டுமே இப்போது காண முடிகிறது.

ஒரு புறம் இரு தரப்பினரும் இணக்கப்பாடொன்றை எட்டவேண்டுமெனப் பிரசாரம் மேற்கொள்ளப்படும் அதே வேளை, மற்றொருபுறம் அதற்கு எதிரான விமர்சனங்களும், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன. அமைச்சரவையினுள் ஜனாதிபதியின் கருத்துக்களுக்கும் பிரதமரின் கருத்துக்களுக்கு மிடையேயான முரண்பாடுகள விரிவடைந்து செல்கின்றன. ஜனாதிபதி அனுமதிக்கும் விடயங்களில் பலவற்றை அரசு அனுமதிக்க மறுத்து வருகின்றது. அது மட்டுமல்லாது சில விடயங்களில் தனது கடும் எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றது. மேலெழுந்த வாரியாக வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இது ஒரு பின்னடைவைத் தோற்றுவிக்கும் அரசியல் தவறெனத் தோன்றும் இந்த் அரசியல தவறால் நாடும், நாட்டின் பொருளாதாரத்துறையும் மேன்மேலும் பின்னடைவைச் சந்திக்க நேருமெனக் கூறும் தரப்பினரும் உள்ளனர். ஆனால், இவ்வகையிலேயே இந்தக் கலப்பு அரசியல் நடைமுறை சம்பந்தமான புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பிரதமரதும் ஜனாதிபதியினதும் அரசியல் வரலாறு அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியைச் சேர்ந்தோரின் தேவைகளை ஒட்டியே அமைந்திருந்த காரணத்தால் எல்லோரும் எல்லாவற்றிற்கும் இணங்கிவரும் அரசியல் நடைமுறையை இந்நிலைமையினூடாக எதிர்பார்க்க முடியாது. ஜனாதிபதி தற்போது மூன்று வித பதவி நிலைகளை வகித்து வருகிறார். அவர் ஸ்ரீ.ல.சு.கட்சியைப் போன்றே பொ.ஐ.முன்னணியின் தலைவராகவும் விளங்கி வரும் அதேவேளை, அவரே இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் உள்ளார். பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, மக்களின் ஆணைமூலம் ஆட்சி அதிகாரம் பெற்ற அரசியல் குழுவாகச் செயற்படவேண்டியுள்ளது. வேறொரு வகையில் கூறுவதானால், நாட்டின் அரசமைப்பின் படி பெரும்பாலான அதிகாரங்கள் ஜனாதிபதி வசமே உள்ளன. ஆனால், மக்களின் ஆணைப்படி நாட்டை நிர்வாகம் செய்யும் அதிகாரம் பிரதமர் தலைமையிலான அரசிடம் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, நாட்டின் பிரதமரே ஐ.தே.கட்சியின் தலைவராகவும் உள்ளார்.

இந்த நிலைமையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அமைச்சரவையில் அரச நிர்வாகத்தின் வேறு பல நடவடிக்கைகளை அவ்வக்கட்சிகளினதும், குழுக்களினதும் தேவைகளை அனுசரித்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கட்சித் தலைவர்களுக்கு உள்ளமையால், உருவாகும் நிலைமைகளை ஆழமாகச் சிந்தித்து உணர வேண்டியது முக்கியமாகும். இந்த யதார்த்தம் ஸ்ரீலங்காவின் அரசியல் கலாசாரத்தில் புதியதோர் அனுபவமாகக் கருதப்பட்ட போதிலும், மேலோட்டமாக நோக்கும்போது இது குழப்பமானதாகத் தோன்றுகின்றது. இதனை ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையேயான முக்கிய அதிகாரப் போட்டியாகச் சிலர் கருதுகின்றனர். ஆயினும், இதில் அதிகாரத்துக்கான போட்டி எதுவுமில்லையென எம்மால் கூறவும் முடியாது உள்ளது. அது அதிகாரத்துக்கான ஜனநாயக ரீதியிலான போட்டியல்லவென்றால் அதுபெரும்பான்மைத் தரப்பின் அரசியல் வெற்றியாகாது. ஆனால், இதனால் அரசினதோ அன்றேல் ஜனாதிபதிப் பதவியினதோ உறுதித்தன்மை குலையும் என எவராலும் எண்ணமுடியாது.

இந்த நடைமுறையில் உள்ள தீமைகள் போன்றே கலப்பு நிர்வாக முறையினால் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் நாம் சிந்தித்து பார்த்தல் வேண்டும். கலப்பு நிர்வாக முறையில் பல நன்மைகளும் ஏற்பட இடமுண்டு. ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ தமது தரப்பினரின் தேவைகளுக்கு ஏற்ப தாம் நினைத்தவாறு தீர்மானம் எதனையும் மேற்கொள்வதற்கு இந்நடைமுறை அனுமதிக்காது. அமைச்சரவையில் முத்தரப்புத் தலைமைத்துவம் இருப்பதால் அரசதரப்பினதும் எதிர்த்தரப்பினதும் விருப்பு வெறுப்புக்கள் வெளிவர இடமுண்டு. அரசு நிறைவேற்ற முயலும் சில அவசர நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும் அது தொடர்பான தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஜனாதிபதிக்கு இதன்மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு தீர்மானம் தவறானதெனவோ அல்லது அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனவோ கருதும் பட்சத்தில் அதுபற்றி கருத்து தெரிவிப்பதுடன் அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளும் அதிகாரமும் அமைச்சரவையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றது. அமைச்சரவையின் பெரும்பாலானோர் அரசதரப்பை சேர்ந்தவர்களாகையால் அரசினால் தனக்கு தேவையானவற்றை நிறைவேற்றி கொள்ளமுடியுமான போதிலும் ஜனாதிபதி தனது கருத்தை நாட்டு மக்கள் முன் வைப்பதன் மூலம் குறிப்பிட்ட காரணங்களால் தான் அவ்விடயத்திற்கு இணங்க முடியாதெனக் கூறும பட்சத்தில் குறிப்பிட்ட அத் தீர்மானத்தை அரசு நிறைவேற்றிக் கொளவதில் சிரமம் ஏற்படும். 1972ஆம் ஆண்டின் முன்னர் இந்நாட்டில செனற் சபை செயற்பட்ட வேளையில் அரசினால் நிறைவேற்றப்படும் சட்டமூல யோசனைகள் யாவும் செனற்சபையின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின்னரே நடைமுறைப்படுத்தப்படும் முறைமை வழக்கில் இருந்தது. அம்முறை ஊடாக நாடாளுமன்றம் நிறைவேற்றும் சட்டமூலத்தை அனுமதிக்கும் அல்லது பின்போடும் அதிகாரம் செனற்சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஒரு சட்டமூலத்தின் சிற்சில பகுதிகளை மாற்றி அமைக்குமாறு அரசிற்கு ஆணையிடும் அதிகாரத்தையும் செனற்சபை கொண்டிருந்தது. ஆதலால் அவ்வேளையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையாவும் இன்று அவசர அவசரமாக சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் சட்ட மூலங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை விட வலுமிக்க, நியாயமான விதத்தில் அமைந்தன. இது அரச நிர்வாகத்தை நியாயமான, பரந்துபட்ட அடிப்படையில் மேற்கொள்ளக் கூடிய நடைமுறையாகும் எதேச்சதிகார அடிப்படையில் எவரொருவராலும் பிரேரிக்கப்படும் எந்த ஆலோசனையும் நடை முறைப்படுத்தப்படுவதைவிட, பல நிலைகளிலிருந்து ஆராயப்பட்டு, பொதுமக்களின் நலனுக்கேற்றவிதத்தில் சட்டதிட்டங்களை உருவாக்க முடிந்தது. செனற் சபைக்கு அவ்வித சட்டதிட்டங்களை ஆராயவும் தாமதப்படுத்தவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இன்று ஜனாதிபதியும் இவ்வித நடவடிக்கைகளையே மேற்கொள்கிறார். பஸ் போக்குவரத்தை தனியார் மயமாக்கும் திட்டத்துக்கு எதிரான தன் கருத்தை அவர் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஸ்ரீ லங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் விடயத்தில் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காத ஜனாதிபதி பஸ்போக்குவரத்து விடயத்தில அவ்விடயத்தைப் பின்போடுமாறு பரிந்துரை செய்திருந்தார். ஆனால், அரசோ அவ்விடயம் அரசுக்கு முக்கியமானதெனத் தெரிவித்து பஸ்நிறுவனத்தைத தனியார் மயமாக்க நடவடிககை மேற்கொண்டது. இருந்தபோதும் இவ்விடயத்தில் பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதில் ஜனாதிபதி வெற்றி கண்டார். ஆனால், ஒருபுறம் தான் எதிர்பார்க்கும் அரசியல் இலக்கை வெற்றியடைய ஜனாதிபதிக்கு இவ்வகைக் கருத்து வெளியீடு உதவக் கூடும். பஸ் போக்குவரத்துத் தனியார் மயப்படுத்தப்பட்டமை எதிர்பார்த்த வெற்றியை அரசுக்கு அளிக்காததால், தமது எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசு தவறிழைத்துவிட்டதாகக்கூறி அரசியல் ஆதாயம் ஈட்டிக்கொள்ளவும் ஜனாதிபதிக்குச் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

இந்தக் கலப்பு அரசியல் நிர்வாக முறையில் பிரதமருக்கும் சில அனுகூலங்கள் உள்ளன. சிறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலதரப்பட்ட தராதரங்களைக் கொண்ட அரசியல்வாதிகளை ஒன்றுசேர்த்து அவரது தலைமையில் இன்றைய அரசு இயங்குகிறது. இவர்களில் சிலர் தற்போதும் பாரதூரமான ஒழுக்கமீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளமை இரகசியமான ஒன்றல்ல. விசேடமாக அமைச்சரவையின் முக்கியஸ்தர்கள் சிலர் பலவகைக் குற்றச்சாட்டுக்களுக்கு உட்பட்டுள்ளனர். இவர்கள் தமக்குத் தேவையான விடயங்களையும், அரசினது கேள்விப்பத்திர அனுமதிகளையும் அமைச்சரவையூடாக நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். பிரதமர் தான் விரும்பாத போதிலும், தேவையான சந்தர்ப்பத்தில் கட்சிகள் மட்டத்திலான ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் அரசை நடத்திச்செல்லவும் வேண்டிய தேவை இருப்பதால அமைச்சர்கள் சமர்ப்பிக்கும் சகல தீர்மானங்கள் நியாயமானவைதானா எனப் பிரதமரால் கண்டறிய முடியாது. ஆனால், இக்கலப்பு அரசியல் தலைமைகொண்ட அமைச்சரவையின் நடவடிக்கைகளால் தவறான வழியில் நிர்வாகம் இடம்பெறவும் இடமுண்டு. விசேடமாக கடந்தகாலத்தில் பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தொடர்பாக ஜனாதிபதி தன் கடும் எதிர்ப்பை தெரிவித்தமையால் அவற்றில் சிலவற்றை அனுமதிக்கமுறுக்குமுன் தாமதம் செய்யவேண்டியேற்பட்டது. சில சந்தர்ப்பங்களில் பிரதமர்கூட ஜனாதிபதியின் இவ்வாறான முடிவுக்கு இணங்கிச் செல்வதாக எண்ண முடிந்தது. இருந்தபோதும் பிரதமருக்கு நேர்மையான அரசொன்றை நடைமுறைப்படுத்திச் செல்லவேண்டிய தேவையுள்ளது. ஆகவே, ஐ.தே.கட்சியும் பொ.ஐ.முன்னணியின் தலைவியும் இணைந்து நடத்திச்செல்லும் இந்த அமைச்சரவையின் நடவடிக்கைகள் பற்றி ஆழமாக ஆராய்வதைவிட அதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும், கிடைக்கக்கூடிய பிரயோசனங்கள் குறித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். இருந்தபோதும், ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய மேலும் இரண்டு ஆண்டுகளே உள்ளன. அக்கால இடைவெளியில் அரசியலில் ஒத்துப்போகும் இத்தன்மை இதே விதத்தில் தொடர இடமுண்டு. இந்த அரசியல் யதார்த்தத்துக்கு எதிராக இயங்குவதைவிட இந்நடைமுறையினூடாக செய்யக்கூடியவற்றைச் செய்ய விளைவது நாட்டுக்கு நன்மையளிக்கும்.

கடந்தகாலத்தில் இந்நடைமுறை மேன்மேலும் முன்னேற்றமடைந்தமையால் இம்முறைமூலம் சுமுகமான அரசொன்றினை நடத்திச்செல்ல முடியுமென்ற கருத்து நாட்டில் வலுப்பெற்றுள்ளது. தேசிய அரசொன்றுக்குப் பதிலாக சமாதான சகவாழ்வு கொண்ட அரசொன்றை சுமுகமானமுறையில் நடைமுறைப்படுத்திச் செல்ல வேண்டுமெனக் கூறும் ஒரு சாராரும் உள்ளனர். அரச தரப்பைச் சேர்ந்த அமைச்சர் மிலிந்தமொறகொட இத்தகைய கருத்தை வலியுறுத்தி வந்துள்ளார். உலகில் பல நாடுகளில் முக்கிய கட்சிகள் இவ்விதமான கலப்பு அரசியல் நடைமுறை உபாயத்தைக் கைக்கொண்டு வந்துள்ளன. அமெரிக்க அரச நிர்வாகம் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோர்ச் புஷ் தலைமையில் இயங்கிவரும் அதேவேளை, அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் ஜனநாயகக் கட்சிக்கே பெரும்பான்மைப் பலம் உள்ளது. ஆனால், அங்கு அரசநிர்வாக



நடைமுறைகள் எவ்விதப் பாதிப்புக்களுமின்றித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பிரான்ஸிலும் இவ்விதமான அரச நிர்வாகம் வெற்றிகரமாக இடம்பெறுகிறது. நோர்வே அரச நிர்வாகம் இதற்கு குறிப்பிடத்தக்க மற்றோர் உதாரணமாகும். அந்நாட்டைத் தற்போது சிறுபான்மைப் பலம்கொண்ட கட்சியொன்றே நிர்வகித்து வருகின்றது. அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் கொண்டுள்ள கட்சியின் தலைவரான பான் பீற்றர்சன் தற்போதைய நோர்வே நாட்டின் வெளியுறவு அமைச்சராகப் பதவிவகித்து வருகிறார். அவர் நாட்டின் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்வது பற்றி எவ்வித ஆர்வமும் காட்டியதில்லை. இவை எமது நாட்டில் இடம்பெற்றுவரும் அதிகாரமோகம் கொண்ட அரசியல் கலாசாரத்துக்கு முற்றிலும் மாறுபட்டவையாகும். அதிகாரத்தை அடைய முயல்வதைவிட அதனைப் பலருக்குப் பிரித்தொதுக்கி நிர்வாகத்தைச் செவ்வனே நடத்திச் செல்ல முயல்வதே சிறப்பானதாகும் என்பதற்கு இந்நாடுகளின் ஆட்சிமுறைகள் சிறந்த உதாரணங்களாகும். கடந்த காலத்தில் இந்தியாவின் பிரதமர்களாகப் பதவி வகித்த ஸ்ரீ சந்திரசேகர் மற்றும் எச்.டீ. தேவகௌடா ஆகியோர் இந்தியாவின முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள் சிறு பிராந்தியக் கட்சிகளையும் சிறுபான்மையின மக்களது அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தியவர்களாவர். இந்திய அரசியல் நிலை நலிவடைந்து காணப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அந்நாட்டின் சிரேஷ்ட கம்யூனிஸ்ட் தலைவரான மேற்குவங்காள முதலமைச்சர் ஜோதி பாசு நாட்டின் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால், அவர் தனது கட்சியின் கொள்கைகளுக்கு முரணானதெனக்கூறி அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டார். உலக அரசியல் அரங்கில் இதுபோன்ற கௌரவ நிகழ்வுகள் பல நடந்தேறியுள்ளன.

நம்நாட்டு அரசியல் நிர்வாக முறை இவ்விதத்தில் அமைந்த தொன்றல்ல. நமது அரசியல்வாதிகள் குறுக்கு வழிகளை நாடுபவர்

**தமிழில்: வியெஸ்ரி**

களாய் உள்ளனர். அவர்கள் அதிகாரபலம் கிட்டும் வேளையில் அதனூடாக முடிந்தவரையில் செல்வத்தைத் தேடிக்கொள்வதில் முனைப்பாயிருப்பதையே நடைமுறையில் நாம் காண்கின்றோம். இப்படியான நிலை ஒரு சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் நிலவியமை எமக்கு ஞாபகத்தில் உண்டு.

தற்போதைய அரசு பதவிக்கு வந்து 15 மாதங்கள் முடிவடைந்துள்ளன. இக்கால இடைவெளியில் திட்டமிடவும், வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் முன்னுரிமையளிக்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள ஸ்ரீ லங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் தற்போதைய நிலைமையில் மேலும் முன்னேற்றம் ஏற்படுமென

(7ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஏப்.23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-3-31)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

வடமராட்சி,ஏப்.23

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, அம்பன் ஆகிய கிராமங்களில வளர்ப்பு நாய்களுக்கு இன்று புதன் கிழமையும் நாளை வியாழக்கிழமையும் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இன்று முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரை மணற்காடு சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை குடத்தனை மேற்கு சனசமூக நிலையத்திலும் -

நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை குடத்தனை, பொற்பதி சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை அம்பன் கிராம அபிவிருத்திச்சங்கத்திலும் -

நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுமென அம்பன் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (ஒ-173)


Cool Laminating

அழகிய பிள்ளையார், சிவன்அம்மன், முருகன் படங்களை குறைந்த விலையில் வாங்க, கூல் லெமினேற்றிங் செய்திட நாடுங்கள்.

பிள்ளையார் அச்சகம்,
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

விலை: 4.00 /=


## இலங்கையின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது. நாட்டில் தீர்க்கப்படவேண்டிய சமூக அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முக்கிய கவனமளித்து தீர்வுகாண அரசு தவறுமானால் முன்னைய பொ.ஐ. முன்னணி அரசின் தலைவிதியே இன்றைய அரசுக்கும் ஏற்படும். இன்று அரச அதிகாரத்திலுள்ளோர் முன்னர் எதிர்க் கட்சியில் இருந்த சமயம் நாட்டின் அவ்வேளையில் இருந்த பொருளாதாரநிலை குறித்தும், அரசியல் நிர்வாகம் மற்றும் லஞ்ச ஊழல் சம்பவங்கள் குறித்தும் மேற் கொண்ட விமர்சனங்கள் யாவும் இன்று அவர்கள் பக்கம் திரும்பியுள்ளன. ஆனால், எவரும் தண்ணீரில் இறங்கி நீந்த ஆரம்பிக்கும் வேளையிலேயே அவரவரது தராதரமும், திறமையும் நாட்டு மக்களுக்குத் தெரிய வரும். 1994இல் பொ.ஐ.முன்னணி அதிகாரத்துக்கு வரும்வரையும் 2001ஆம் ஆண்டில் இன்றைய அரசு பதவிக்கு வரும்வரையும் பலவித அரசியல் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டனவேயொழிய நாட்டுக்கு அவசியமான அபிவிருத்தித்திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அதிகாரம் கைக்குக் கிடைத்ததன் பின்னரே அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க இயலும். அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த மேலும் கால அவகாசம் தேவைப்படும். ஆனால், தற்போதைய அரசு தயாரித்த சிறந்த பல திட்டங்கள் கூட அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய அதிகாரிகள் அவற்றுக்குக் குறுக்கே நிற்பதால் முன்னெடுத்துச் செல்ல முடியாத வகையில் முடங்கியுள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது. அரசின அமைச்சுக்களை கப்பலின் சுக்கான் போன்றிருந்து இயக்க வேண்டிய அமைச்சுக்களின் செயலாளர்கள் தொடக்கம் கீழ்த்தரத்திலுள்ள அதிகாரிகள்வரை திறமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். தற்போதைய அரசின் கீழ் 15இற்கும் மேற்பட்ட அமைச்சுக்கள் இயங்குகின்றன. இவற்றின் செயலாளர் பதவிகளை வகிப்போரில் பெரும்பாலானோர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரிகளே. இவர்களில் பெரும்பாலானோர் அமைச்சர் சிபார்சு செய்யும் திட்டங்களைக் கூட தாமதப்படுத்தி வருவது எல்லோரும் அறிந்த பகிரங்க ரகசியமாகும். அமைச்சர்களாவது இவ் விடயத்தில் தலையிட்டு நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். திறமையுள்ள செயலாளர்களை நியமிக்காது அமைச்சின் நடவடிக்கைகளை அரசு எதிர்பார்க்கும் வகையில் முன்னெடுத்துச் செல்லுதல் சிரமமானதொரு விடயமாகும். இவ்வரசு மீதமுள்ள தனது பதவிக்காலத்தைச் சிரமமின்றித் தொடர விரும்பினால் திறமையுடன் செயலாற்ற விருப்பம் கொண்டவர்களடங்கிய நடவடிக்கைக் குழுவொன்றினை நியமித்தல் அவசியமாகும். திறமைசாலிகளைக் கண்டறிவது திறமைமிக்க நிர்வாகியின் அவதானிப்பின் மூலமே சாத்தியப்பட முடியும்.

கலப்பு அரச நிர்வாக முறையுடன் கூடிய அரசொன்றை மேலெழுந்தவாரியாக நோக்கும்போது அது உறுதியற்றதாகத் தோன்றும். அரசை நிர்வகிக்கும் வேளையில் கலப்பு அரச நிர்வாகத்தின் பலாபலன்களை பொதுமக்கள் அடையவேண்டுமாயின் அமைச்சுக்களில் திட்டங்களைத் தயாரிக்கும் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆகியோரிடையே ஓர் ஒற்றுமைநிலை நிலவவேண்டும். தற்போதைய அரச நிர்வாகத்தில் இது வரையில் அவ்வாறானதோர் ஒற்றுமை நிலையைக் காணமுடியவில்லை. அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் தாமதமாகவே முன்னெடுக்கப்படுகின்றன. இது குறித்து பிரதமர் தலைமையிலான அரசுத் தலைவர்கள் சிந்தித்துச் செயற்படுதல் பெறுமதி மிக்கதாய் அமையும். ★

## புதுமணத் தம்பதிகளின் மனமார்ந்த நன்றிகள்

### திரு.திருமதி இரவிச்சந்திரன் - தயாளினி




சென்ற 27.03.2003 தினத்தன்று ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சிறப்புற நிறைவேறிய திருமண வைபவத்தில் நேரில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்த பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அன்பு உள்ளங்களுக்கும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அன்பர்களுக்கும் ஆலய பிரதமகுரு, பரிபாலன சபையினர் முதலியோருக்கும் வரவேற்புபசாரங்கள், வாழ்த்துக்கள் வழங்கிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கொண்டாதோட்டம்,*
*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.*
*ரொறொன்ரோ,*
*கனடா* (16078)

மணமகளின் சகோதரர்கள்:-
**திருமதி த.குமுதினி,**
**திரு. பூ.குமுதானந்தன்,**
**திரு.பூ.தயாகரன்**
**மைத்துனர்: திரு.த.தங்கேஸ்வரன்**
**அண்ணி: திருமதி கு.சிவமலர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10
10
1926



மறைவு
24
03
2003

## அமரர் கந்தர் சுப்பிரமணியம்

**எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடன் ஆறுதல்தந்து, உதவிகள் செய்தோருக்கும் தந்திமூலம் அனுதாபச்செய்திகள் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (2003.04.23) புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

நிரந்தர முகவரி:-
*வறுத்தளைவிளான்,*
*தெல்லிப்பழை.*
தற்காலிக முகவரி:-
*கோப்பாய் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (16820)

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


குடாநாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபன ஏகவிநியோகஸ்தராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம். யாழ். மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள் தமது ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களுக்குமான மருந்து வகைகளை எம்மிடம் நேரடியாகக் கொள்முதல் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. ஆயுர்வேத வைத்தியர்கள் நேரடியாக எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கூட்டுஸ்தாபன விலைகளுக்கே நாம் மருந்து வகைகளை வழங்குகின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:-

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2567

குறிப்பு: ஆயுர்வேத மருந்துவகைகளை கொள்முதல் செய்பவர்களுக்கு 10 வீதம்முதல் 15 வீதம்வரை விற்பனைக்கழிவு வழங்கப்படும். (C/27487)






முதன் முறையாக

License No: 30445

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

BS No - 5412:1996
License No: KM41240

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337284 (நேரடி), 324261-5, 337282-5
பெக்ஸ்: 446884

WATER

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

நல்லூர், நாவலர் வீதியில 3 1/4 பரப்பு வீடுகட்டக்கூடிய வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 3220, 0777-171417 (17091)

## கார் விற்பனைக்கு

லான்சர் வைகன் மொடல் 12 சிறி தொடரிலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: தீபன் 222 - 2332. (17100)

## வீடு வாடகைக்கு

இல.417, நாவலர் வீதியில் ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகாகவுள்ள வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: இல.417, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகாக). (17097)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக குஞ்சுகள் 24-04-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். அத்துடன் Marec Vaccine போட்ட சிவப்பு சேவற் குஞ்சுகளும் உண்டு. முன்கூட்டிப் பதிவுசெய்யவும் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17061)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று 23-04-2003 மாலை விநியோகிக கப்படும். பதிவுசெய்தோரும் தேவைப் படுவோரும் தொடர்புகொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 3529, 2867. (17098)

## பசு வைத்தியர் தேவை

பசு ஒன்று அபூர்வ நோயால் பீடிக்கப்பட்டு கழுத்து திரும்பிய நிலையில் கஷ்டப்படுகிறது. வைத்திய உதவி உடன் தேவை. தொடர்பு: சு.கணேசபிள்ளை, இல.134, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P. 222 5145 (17064)

## மணமகள் தேவை

1972, மிருகசீரிடம், 4ஆம் கால் செவ்வாய்க் குற்றமற்ற லண்டன் மணமகனுக்கு, லண்டனில் P.R. உள்ள மணமகள் தேவை. வேறு நாட்டு மணப்பெண்களும் விண்ணப் பிக்கலாம். தொடர்பு: Dr.பொ.மகாலிங்கம், "அன்னமகால்" குட்பிளான் தெற்கு, கேணியடி, ஏழாலை.(17057)

## மணமகன் தேவை

1973 ஆம் ஆண்டு, பூரம், செவ்வாய்க் குற்றமற்ற, பொதுநிற, இந்து சமய, அரசகணக்காளர், 5'2" உயரமான, அழகிய பெண்ணுக்கு அரச, அரசசார்பற்ற அந்தஸ்தான கௌரவ குடும்ப மணமகன் தேவை. சீதனம் உண்டு. குறிப்புடன் தொடர்பு: அளவெட்டி புகழ்சோதிடர், அ.பொ. பொன்னுத்துரை, கொக்குவில்.(17066)

## தவறிவிட்டது

அன்னசத்திர ஒழுங்கை, நீராவியடியில் 21ஆம் திகதி நினைவுப் பரிசாக வழங்கவிருந்த 3 கைக்கடிகாரங்கள் அடங்கிய பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.6, அன்னசத்திர லேன், நாவலர் வீதியில் ஒப்படைத்து தவவும். (சன்மானம் வழங்கப் படும்) T.P 222 2332. (17099)

## திடீர் மழையினால் பயிர்கள் பாதிப்பு

வலி.கிழக்கு பிரதேசங்களில் நேற்று முன்தினம் நண்பகலில் திடீரெனப் பெய்த கடும் மழையினால் அப்பகுதி விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பயிரிடப்பட்ட புகையிலை மற்றும் வெங்காய பயிர்களே மழையினால் அதிகளவு பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஏ-17)

## PROFESSIONAL SERVICES

Preparing project and Feasibility Reports for small and medium size companies - existing and new projects. Arranging Indian Credit Line facilities, re-organizing sick companies in order to improve productivity, performance and profitability.

**Business Management Consultancy Services,**
No.7, Albert Place, Dehiwala.
Tel:/Fax. 01 717401
Mobile 0777 354084.
E-Mail - bmcsnava @ isplanka.lk
(17042)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர்

## திரு.கே.ரி.சிவபாதம்

அவர்கள் மீண்டும் பதவியேற்றுள்ளதை மிகவும் மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். தொடர்ந்து அவர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கு இறைவனின் ஆசியை வேண்டுகின்றோம்.

நவாலி, மானிப்பாய், சுதுமலை, சாவற்கட்டு, உயரப்புலம், முள்ளி ஆனைக்கோட்டை மக்கள் சார்பில்

**மத்திய மருந்தக அபிவிருத்திச்சபையினர்**
மானிப்பாய்.
(17033)

---

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## திருமிகு அம்பலவாணர் சந்திரசேகரர்

*(ஓய்வுபெற்ற உப அதிபர்)*

கருணைப் பெருங்கடலாய் கைதையிலே
வந்துதித்து
கல்விக்கு அதிபதியாய் மாணவரை மலர
வைத்தாய்!
தமிழினத்தின் விடுதலைக்கு வித்திட்ட வித்தகரே
விலைமதிக்க முடியாத விளங்குதமிழ்ப் பேரரசே!
மைந்தனவன் சந்திரனை தென்மராட்சி
செயலகத்தில் மிளிரவைத்தீர்
ஓங்குபுகழ் மேன்மை பெற நீவிர் நீடுவாழ வாழ்த்துகிறோம்.

சு.செல்வராசா
*கிராம அலுவலர், கைதடி.*
(17093)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1924 - 08 - 07 |  | 2002 - 05 - 04 |

## திருமதி கனகாம்பிகை அருணாசலம்

*திதி 2003. 04. 23*

கருணையாய் எம்மைப் பேணி வளர்த்து
செகத்தினில் செம்மையாய் வாழ வைத்து
சுகத்தினில் குறைகள் வந்துற்ற போதும்
நிறைவுடன் வாழ வைத்த அன்னை.

*117/4, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (17105) குடும்பத்தினர்.

---

# வலி.கி.தெ.ப.ப.நோ.கூ.சங்கம்,

நீர்வேலி

*லொறி ரயர், ரியூப், பற்றறி விற்பனைக்கான*

## கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் பாவித்து கழற்றப்பட்ட பின்வரும் பொருள்கள் விற்பனைக்குண்டு.

1) லாண்ட்மாஸ்ரர் - ரயர் - 02
2) லாண்ட்மாஸ்ரர் - ரியூப் - 03
3) லொறி ரயர் 8.25.20 - 05
4) லொறி ரயர் 900.20 - 09
5) லொறி ரியூப் - 12
6) பற்றறி - 02
7) மப்ளர் - 12


தலைமைக்கந்தோர் களஞ்சியத்திலும் நீர்வேலியிலும் இவற்றை கிழமை நாள்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.5.00 மணிவரை பார்வையிடலாம். கேள்விக் கோரிக்கைகளை வாங்க விரும்புவோர் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து "பொதுமுகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கவும். தபாலின் இடதுபக்க மேல்மூலையில் ரயர், ரியூப்புக்கள் விற்பனைக்கான கேள்விக் கோரிக்கை எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 28.04.2003 ஆம் திகதி பி.ப.4.00 மணிவரை.

நீர்வேலி.
19.04.2003
(சி-27517)
பதில் பொதுமுகாமையாளர்.

---

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராசதுரை சடாட்சரம்

*(உரிமையாளர், வீனஸ் தங்கமாளிகை)*

மலர்வு 08-08-1939 — உதிர்வு 13-05-1993

எமது குடும்பத் தலைவராய், புகழ்மிக்க மாணிக்கமாய், குலவிளக்காய், மங்காத் தீபமாய், பாசமுடன் பேணிக் காத்து, யாவர்க்கும் தலைவனாய், எமக்கு நல்வழி காட்டி வாழ்ந்து, தம் கடமைகளை நிறைவாகச் செய்து இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட அன்புத் தலைவரின் பொன்னடியை என்றென்றும் தொழுவோமாக.

*"ஐயீராண்டுகள் கடந்தாலும் ஆறாத வடுவாய் உள்ளது நம் துயர்."*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
(வீனோ நகைப் பூங்கா)

*43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.*
(C27518)

---

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 09 - 11 - 1920 |  | 09 - 05 - 1988 |

அமரர்

## நாகலிங்கம் பாலகிருஷ்ணர்

(பத்தர்)
திதி: 23-04-2003

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பூநாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.
(மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை.)
(17101)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் மீன்பிடிக் கற்கைநெறிப் பயிற்சியில் கலந்துகொண்ட பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், மீன்பிடித் தொழில் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான சமூகக்கல்வி பாடநூல்கள் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செயத்மறாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மீன்பிடிக் கற்கைநெறி தொடர்பாக ஆசிரியர் வழிகாட்டி நூலான மேற்படி சமூகக்கல்வி நூல்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் வழங்கப்படும் எனவும் அதிபர் தெரிவித்தார்.(ம-51)

## பழைய சோற்றுடன் மீன்கறி உண்ட 4பேருக்குப் பாதிப்பு

பழைய சோறும் திருக்கைமீன் கறியும் உட்கொண்டதால் வாந்திபேதிக்கு இலக்காகியதாகக் கூறி சகோதரர்கள் இருவர் உட்பட நான்கு பேர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்கரை வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த இராசதுரை யசோதரன (வயது18), இராசதுரை யசோதா (வயது25), சதீஷ்வரன் கிஷாந்தினி (வயது04), தீருணா தினேஷ் (வயது08) ஆகியோரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-15)

# சுழிபுரம் வைத்தியசாலைக்கு ஆயுர்வேத மருந்து கிடைத்தது

வலி.மேற்கு,ஏப்.23

சுழிபுரம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் ஆயுர்வேத திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனால் நீண்ட நாள்களாக இருந்துவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. தற்போது ஆறு நாள்களும் வைத்தியசாலை இயங்குகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடந்த பல மாதங்களாக மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வந்தது. இதனால் சங்கானையில் இயங்கிவந்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

தற்போது சுழிபுரத்தில் இயங்கிவரும் வைத்தியசாலைக்கு மட்டும் மருந்துகள் கிடைத்துள்ளன. ஏனைய வைத்தியசாலைகளுக்கும் மருந்துகளை ஆயுர்வேத திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கு வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலிகாமம் மேற்குப் பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-175)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்று முக்கிய கலந்துரையாடல்கள்

அச்சுவேலி,ஏப்.23

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்கள் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளன.

உரும்பிராய் வர்த்தக எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் காலை 10 மணிக்கு சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அச்சுவேலி, புத்தூர் வர்த்தக சங்க எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக சங்கங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் அச்சுவேலி மத்திய கல்லூரியில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் வர்த்தக சங்க எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இரவு 7 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை -

அச்சுவேலி மினிபஸ் சங்கத்தின் உறுப்பினர்கள், நிர்வாகிகள், மினிபஸ் உரிமையாளர்கள், மினிபஸ் சாரதிகள், மினிபஸ் காப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கலந்துரையாடல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நடுவப்பணியகத்தின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்க உள்ளதால் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி. கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-11)

# ஆனைக்கோட்டைப் பகுதி வீதியில் மீன் விற்பனைசெய்யத் தடைவிதிப்பு

ஆனைக்கோட்டை- சோமசுந்தரம் வீதியில் காலை நேரத்தில் வீதியோரத்தில் வைத்து மீன் விற்பனைசெய்வதறகு மானிப்பாய் கிராம உப அலுவலக பொறுப்பதிகாரி தடைவிதித்துள்ளார்.

மானிப்பாய் கிராம உப-அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் நவாலி பிரசாத் சந்தையில் மீன் மற்றும் மரக்கறி சந்தை கூடுவதாகவும் -

தினமும் சோமசுந்தரம் வீதியில் விற்பனைக்காக கூடுவோர் பிரசாத் சந்தையில் வைத்து தமது பொருள்களை விற்பனை செய்யுமாறும் - உப - அலுவலக அலுவலர் கேட்டுள்ளார்.

இதேவேளை - மேற்படி ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் ஒரு சில மீன் வியாபாரிகளே கூடுவதாகவும் -

அது சந்தையாகக் கணிக்கப்பட முடியாது எனவும் - அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க மானிப்பாய் - ஆனைக்கோட்டை பிரதான வீதியில் இயங்கிவரும் மாலை நேர மீன் சந்தை எவ்வித கட்டுப்பாடும் இன்றி ஆலய வீதியில் இயங்கி வருவதாக பொதுமக்கள் பலரும் முறையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஒ-185)

# எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை!

## களுத்துறைக் கைதிகள் விசனம்

கொழும்பு,ஏப்.23

தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் விசனம் தெரிவித்திருக்கின்றார்கள்.

அண்மையில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி களுத்துறைச் சிறைக்குச் சென்று தமிழ்க் கைதிகளுடன் உரையாடியபோதே அவர்கள் தமது விசனத்தை வெளியிட்டனர்.

தம்மில் ஐந்து பேருடைய வழக்குகளை அவர்களின் சொந்த இடங்களுக்கு மாற்றுவதாகவும் - மேலும் ஐந்து பேரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் - தமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதாக தமிழ்க் கைதிகள் அப்போது தெரிவித்தனர்.

அவ்வாறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையிலும் அவை நிறைவேற்றப்படவில்லை எனவும் கைதிகள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி இம்மாத இறுதிக்குள் ஒரு தீர்க்கமான முடிவை அறிவிப்பதாக விநாயகமூர்த்தி எம்.பி., கைதிகளிடம் கூறியுள்ளார். (ஒ-4)

# பிள்ளைகள் வெளிநாடு சென்றுவிட இங்கு ஆதரவின்றி வாடும் முதியோர்!

## சமூகசேவை அலுவலர் கவலை

வலி.மேற்கு,ஏப்.23

பிள்ளைகள் உட்பட உறவினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட நிலையில் முதியோர் பலர் பராமரிப்பாரின்றி இங்கு பரிதவிக்கின்றனர்.

- இவ்வாறு வலி.மேற்கு பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் வி.கே.முருகையா தெரிவித்தார்.

வட்டு.வடக்கு கிராம அலவலர் அலுவலகத்தில் கிராமிய முதியோர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூக சேவை அலுவலர் வி.கே. முருகையா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

வெளிநாடுகளுக்குச் சென்ற ஏராளமானவர்கள் தமது தாய், தந்தையரை இங்கு தனிமையில் விட்டுச் சென்றுள்ளனர். இவர்கள் சரியான பராமரிப்பின்றி அவலப்படுகின்றனர். முதியோர்கள் இன்று வீடுகளில் ஒதுக்குப்புறமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் முதியோர்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டியது எமது கடமையாகும். முதியோர்களின் இன்றைய நிலைமையைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களம் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராமிய முதியோர் சங்கங்களை ஆரம்பித்து இச்சங்கங்கள் மூலம் முதியோர்களின் நலன்களைப் பேணுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அரச அலுவலகங்கள், வங்கிகள், வைத்தியசாலைகள் போன்ற பொது இடங்களில் முதியோர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சேவையினை அதிகாரிகள் வழங்கவேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு கிராமிய முதியோர் சங்கங்கள் முன்னின்று சேவையாற்றவேண்டும் - என்றார் அவர். (ஒ-175)



கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் ஏற்பாடு செய்த பட்டிமன்ற நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியை விஜயசுந்தரி உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பேராசிரியர் ந.சேகர், சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (எ)

# செய்திக் கொத்து

## சனசமூக நிலையத்துக்கு நூல்கள் கொள்வனவு

வடமராட்சி,ஏப்.23

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்துக்கு 60ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வசிக்கும் காந்தியூர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இப்புத்தகக் கொள்வனவுக்கான நிதியைத் திரட்டிவழங்கியுள்ளனர்.

சிறுகதை, இலக்கியம், பொது அறிவு, கணனி ஆகிய துறைசார்ந்த புத்தகங்கள் இவற்றில் அடங்குகின்றன. (எ-173)

## நடத்துநர்கள் நியமனம்

வடமராட்சி,ஏப்.23

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையில் புதிதாக 10 நடத்துநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நடத்துநர்களாக அண்மையில் தெரிவாகி பயிற்சிபெற்று வெளியேறியவர்களிலிருந்து இந்த 10பேரும் நியமனம் பெற்றுள்ளனர். (ஒ-173)

## 3பிரதேச சபைகள் விரைவில் தரமுயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.மாவட்டத்தில் உள்ள நல்லூர், கோப்பாய், மானிப்பாய் ஆகிய பிரதேச சபைகள் விரைவில் நகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இவற்றின் உள்ளார்ந்த சபைகளையும் விவரங்களையும் பட்டியலிட்டுத் தருமாறு உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி கோரியுள்ளதாகவும் -

பட்டியல்கள் தற்போது யாழ்.பிரதேச உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமியால் தொகுக்கப்பட்டு வருவதாகவும் - அறியமுடிகிறது. (ஒ-185)

## முன்பள்ளி அபிவிருத்தி குறித்து கருத்தரங்கு

செம்பியன்பற்று,ஏப்.23

முன்பள்ளி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், முன்பள்ளி நிர்வாகிகள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது. (எ-36)

## இந்து குருமார் ஒன்றியத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.23

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்துக்கும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆனைப்பந்தியில் உள்ள ஒன்றியத்தின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

குருமார் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் சமகால அரசியல் நிலை குறித்தும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றன. (ம-3)

## அதிபர்களுக்கு வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.23

இலங்கை அதிபர் சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

அதிபர் சேவையின் 1, 2-I, 2- II மற்றும் III ஆம் தரத்தில் உள்ள அதிபர்களே மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-185)

## கோப்பாய்ப் பகுதி பொது அமைப்புகளின் கலந்துரையாடல்

அச்சுவேலி,ஏப்.23

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பொது ஸ்தாபனங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நீர்வேலி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், விவசாயக் கழகங்கள், மாதர் மன்றங்கள், விவசாய சம்மேளனங்கள் ஆகியவற்றின் நிர்வாகக் குழுவினர் மற்றும் உறுப்பினர்கள் இதில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கோப்பாய்க் கோட்ட அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தின் முக்கிய பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (எ-11)

## வீதியைத் திருத்த கோரிக்கை

வடமராட்சி,ஏப்.23

கரவெட்டி கிழக்கில் உள்ள கம்பன் படிப்பக வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையினால் அவ்வீதியால சென்று வருவோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதியை அகலமாக்க வசதியாக வீதியருகே உள்ள குடியிருப்பாளர்கள் தத்தமது எல்லைகளை பின்நோக்கி நகர்த்தியுள்ளனர்.

எனினும், இவ்வீதியைத் திருத்தி அமைக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-173)

## சுகாதார ஸ்தாபன பிரதிநிதிகள் விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ள உலக சுகாதார ஸ்தாபனப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்தனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் உயரதிகாரிகள், டாக்டர்கள் உடனான கலந்துரையாடல் ஒன்றிலும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் சுகாதார அபிவிருத்திகள், ஆய்வுகூடத்தின் தேவைகள் பற்றி இக்கலந்துரையாடலின்போது உரையாடப்பட்டன.

## கிழக்குப் பிராந்திய பாதுகாப்புக் குறித்து கொழும்பில் மாநாடு

கொழும்பு,ஏப்.23

கிழக்குப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராயும் மாநாடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மூதூர்ப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மற்றும் கிழக்கின் பாதுகாப்புத் தொடர்பாக விரிவாக ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## கசிப்பு வழக்கில் ரூபா 12ஆயிரம் அபராதம்

கசிப்பு உற்பத்தி செய்துவைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 12ஆயிரம் ரூபாவை குற்றப்பணமாக விதித்துள்ளது.

நெடுங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த ஜெயசுதன் பாமினி என்பவரையே 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-8-5)

## புலமைப்பரிசில் ஆதார உதவி

தபால், தந்தி நலன்புரிக்கழகம் அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆதார உதவித் தொகை வழங்கவுள்ளது.

மேற்கூறிய உதவித் தொகை பெற விரும்புவோர் உரிய படிவங்களை தலைமையகத்தில் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-170)

# பிரதேச செயலக அணிகளுக்கான கபடி சுற்றுப்போட்டியின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கபடிச்சுற்றுப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் இவ்வாண்டுக்கான [illegible]பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் மருதங்கேணி பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் இரண்டாம் இடங்களைப் பெற்றன.

அதேவேளை, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், நல்லூர் பிரதேச செயலக அணியும் பங்குபற்றின.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி, நல்லூர் பிரதேச செயலக அணியைத் தோற்கடித்து சம்பியனாகியது. இவ்வாட்டத்தில் சகலதுறை ஆட்டக்காரராக பருத்தித்துறை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த பா.ஸ்ரீதேவி தெரிவுசெய்யப்பட்டார்.

அதேநேரம், ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி, தெல்லிப்பழை பிரதேச செயலக அணி, மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி என்பன தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஒ-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த முன்னாள் அதிபர்

### முருகேசு கந்தையா

அவர்கள் 19-04-2003 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நாயன்மார்கட்டு*
*மகேஸ்வரி வித்தியாசாலை,*
*யாழ்ப்பாணம்.* (17112)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கார்த்திகேசு பொன்னுத்துரை

தோற்றம் 14 - 11 - 1917

மறைவு 04 - 05 - 2002

எல்லா நாளும் எம்மை அரவணைத்து
நல்லாய் வளர்த்த எங்கள் அப்பா!
சொல்லாமல் சென்றீர் துடிக்கின்றோம் - நீர்
இல்லாமல் எப்படி வாழ்வோம் இனி...?

*T.C.லேன்,*
*சுதுமலை மேற்கு, மானிப்பாய்.* (17116)

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.


## யப்பான் சயிக்கிள்

முற்றுமுழுதாக யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட
ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான சயிக்கிள்கள

- ஓட்டத்திற்கு இலகுவானவை
- விலை 3000/=இலிருந்து
- கழுவிப் பூட்டவோ, அடிக்கடி பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை
- புத்திசாலிகள் இப்போது யப்பான் சயிக்கிளையே கொள்வனவு செய் கிறார்கள்.



யப்பான் சயிக்கிள் விற்பனையில் பல வருட அனுபவமுள்ளவர்கள்

**சித்திவிநாயகர் சயிக்கிள் (B) பசார்**

347, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(17117) *(மனோகரா சந்தி அருகில்)*


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடப் பரீட்சைகள் - 2002

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களிடமிருந்து பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 22.04.2003ஆம் திகதி முதல் 30.04.2003ஆம் திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. முதலாம் வருட முதலாம் அரையாண்டு *(கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்)*
02. நுண்கலைமாணி இசை/நடனம் - நான்காம் வருடப் பரீட்சை

### மீள் பரீட்சைகள்

03. முதற்கலைத் தேர்வு *(பழைய பாடத்திட்டம்)*
04. பொதுக்கலைத் தேர்வு பகுதி I/சிறப்புக் கலைத் தேர்வு பகுதி I *(பழைய பாடத்திட்டம்)*
05. பொதுக்கலைத் தேர்வு பகுதி II/சிறப்புக் கலைத் தேர்வு பகுதி II *(பழைய பாடத்திட்டம்)*
06. சிறப்புக் கலைத் தேர்வு பகுதி III *(பழைய பாடத்திட்டம்)*
07. இரண்டாம் மொழி ஆங்கிலம் - I, II, III, *(ESL Leval I, II, III)*
08. நுண்கலைமாணி இசை/நடனம் - நான்காம் வருடம்

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல்வேண்டும்.

பதிவாளர்
22.04.2003 (C/27524)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.23

யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை முதல் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

- முற்பகல் 8.30 மணி - சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.
- முற்பகல் 10.00 மணி - சங்கானை பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.
- பிற்பகல் 3.00 மணி - ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.
- பிற்பகல் 4.30 மணி - நெடுந்தீவு பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

(ஒ-5)

## கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் சம்பியன்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பத்தொன்பது வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மாவட்டச் சம்பியனாகியது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும மூன்றாம் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

## இலங்கை அணிக்கு பயிற்றுநர் தேடுவதில் தொடர்ந்து இழுபறி

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுநராகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பினை ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ரிக்சன் நிராகரித்துள்ளார்.

இலங்கை அணிக்கு புதிய பயிற்றுநரை நியமிப்பதில் இலங்கைக் கிரிக்கெட்சபை தீவிரம் காட்டிவருகிறது. இதற்கான ஒரு பட்டியலையும் இலங்கைக் கிரிக்கெட்சபை தயாரித்து வைத்திருந்தது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் ரிக்சனும் இந்த வாய்ப்பை நிராகரித்துள்ளார்.

நியூஸிலாந்து அணியின் முன்னாள் பயிற்றுநரான ஸ்டீவ் ரிக்சன், நியூ சௌத் வேல்ஸ் அணிக்குத் தொடர்ந்து பயிற்சியாளராக நீடிக்க விருப்பதால் இலங்கை அணியின் பயிற்றுநராக பணியாற்றும் வாய்ப்பை நிராகரித்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தைச் சேர்ந்த பொக் உல்மர், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கிரஹம் போர்ட், நியூஸிலாந்தின் ஜோன் பிரேஸ் வெல் ஆகியோர் இலங்கை அணியின் பயிற்றுநர்களாக பணியாற்ற மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் முத்தரப்பு தொடருக்கு இலங்கை அணிக்கு இடைக்கால பயிற்றுநராக துலீப் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், ஜூன்மாதம் நடைபெறவுள்ள மே.இ.தீவுகள் அணிக்கு எதிரான தொடருக்கு முன்பு முழு நேரப் பயிற்சியாளரை நியமிக்க தீவிர நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் சபை எடுத்துவருகின்றது. (ஒ)


## தேவை

தொலைபேசி
இணைப்பு தேவை.
விற்பனை செய்ய
விரும்புபவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும்.

வீ.இல. - 1857
மே/பா உதயன்


# இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இணைச் சம்பியன்களாகத் தெரிவு!

ரி.வி.எஸ். கிண்ணத்திற்கான ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் இணைச்சம்பியன்களாகத் தெரிவு செயயப்பட்டன. கடும் மழை காரணமாக இறுதிப் போட்டி பாதிக்கப்பட்டமையே இதற்குக் காரணம்.

இந்தியா, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் இத்தொடரில் பங்குபற்றின. இறுதிப் போட்டி ஞாயிறன்று நடைபெறவிருந்தது. ஆனால், கடும் மழை காரணமாகத் திங்கட்கிழமைக்கு இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய நாணயச் சுழற்சியில் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி வெற்றி பெற்றார். அதையடுத்து இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 7ஆவது ஓவரில் வீரேந்தர் ஷேவாக் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய வீரர்களும் விரைவாக விக்கெட்டுகளைத் தாரைவார்த்தனர். இந்திய அணி 17.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. அதன்பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பிகப்படவில்லை. சில மணி நேரங்களின பின் மழை தணிந்ததும் மைதானத்தை உலர்த்தும் பணி ஆரம்பமானது.

இப்பணியில் ஹெலிகொப்டர் ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால், போட்டியை மீண்டும் ஆரம்பிக்கும் நிலை இல்லையென மத்தியஸ்தர் கிளைவ லொயிட் தீர்மானித்தார்.

இதனால், இந்தியாவும் தென்னாபிரிக்காவும் இணைச் சம்பியன்களாகத் தெரிவாகின. இத்தொடரின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க வீரர் அலன் டோசன் தெரிவானார்.

# கார்ல் லூயிஸ் கைது!

அமெரிக்க ஓட்டவீரர் கார்ல் லூயிஸ், மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காக கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கார்ல் லூயிஸ் செலுத்திய கார் விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸார், கார்ல் லூயிஸ் அளவுக்கு மீறி மது அருந்தி இருக்கலாம் என சந்தேகித்தனர்.

இதனால், லூயிஸ் கைதுசெய்யப்பட்டு அருகிலுள்ள பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு, லூயிஸ் மது அருந்தியிருக்கிறாரா என்பதை அறிவதற்காக சோதனை நடத்தப்பட்டது. அதன் பின் லூயிஸை அவரின் நண்பர் ஒருவர் பிணையில் அழைத்துச் சென்றார்.

ஒலிம்பிக் போட்டிகளில் 9 தங்கப் பதக்கங்கள் உட்பட 10 பதக்கங்களை வென்றவர் லூயிஸ். (ஒ)

## UNHCR நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சித்திரக் கண்காட்சி - 2002

உலக அகதிகள் தினத்திற்காக UNHCR நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சித்திரம் வரைதலில் பங்குபற்றிய சிறுவர்கள் யாவருக்கும் நாளை (24.04.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளமையால், பங்குபற்றிய அனைத்துச் சிறுவர்களும் மேற்குறிப்பிட்ட தினத்தன்று தவறாது UNHCR காரியாலயத்துக்கு சமுகந்தரவும்.

**UNHCR**

223, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (C/27516)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி

### வீரசிங்கம் அருள்மலர்

உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உணர்வால் எம்மோடு வாழும்
இதயத் தெய்வமே:

*நாகம்மாள் கோவில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

இராசரத்தினம்
(தவம்)

(17122)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வீரசிங்கம் அருள்மலர்

உடுவிலை பிறப்பிடமாகவும் தற்போது நோர்வே, ஒஸ்லோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் அருள்மலர் 17.04.2003 வியாழக்கிழமை நோர்வே, ஒஸ்லோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் பஞ்சலிங்கம் (நோர்வே), அமுதலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற கலாமலர் மற்றும் தயாமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கோமளாநிதி (நோர்வே), விஜயலட்சுமி (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வரத்தினம், பவளமலர், கமலாம்பிகை, வாலாம்பிகை, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியம், பஞ்சலிங்கம், தம்பிராசா, பீதாம்பரம், பவளராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஸ்ணா, சுகந்தன், அதிதன் (நோர்வே), சுதர்சன், விஜிதன், றகீம், அலெக்ஸ், அருணி (சுவிஸ்), இலக்கியன், இலக்கியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (23.04.2003) புதன்கிழமை நோர்வே, ஒஸ்லோவில் நடைபெறும். இன்று உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் கோவில் வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (17121)

தகவல்:
சகோதரர்கள்.

### முருகேசு தர்மலிங்கம்

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தர்மலிங்கம் 20.04.2003 அன்று காலமானார்.

அன்னார் சிவகங்கையின் அன்புக் கணவரும் சிவபாதசுந்தரம், பாலச்சந்திரன் (ஜேர்மனி), சறோஜினிதேவி, சாந்தகுமாரி, முருகசோதி (கணேசா ஹாட்வெயர்ஸ், மூளாய்), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, இலட்சுமியார் மற்றும் செல்லமுத்து, மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் யசோமதி, புஸ்பமலர், செல்வரத்தினம், நிதிவண்ணன், சாந்தரூபி, செந்தில்ராஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2003) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் தெற்கு,*
*சுழிபுரம்.* (17120)

தகவல்:
த.சிவபாதசுந்தரம் (மகன்)

# படைப்பின் ரகசியம்



இயற்கையின் பல்வேறு அதிசயங்களில் ஒன்று கருததரித்தல். அறிவியல் ரீதியாகக் கருத்தரித்தல் எப்படி நடைபெறுகின்றது என்பதை விஞ்ஞான உலகமும் மனித இனமும் அறிந்துள்ளது.

ஆண் விந்தணு பெண் கருமுட்டையுடன் இணையும் போது கருத்தரித்தல் நடைபெறுகிறது. இந்த சேர்க்கையின் காரணமாக புதிய உயிரினம் தோன்றுகிறது. இது கருத்தரித்தல் தொடர்பான பொதுவான கருத்து.

ஆணின் விந்தணு பெண் கரு முட்டையை சரியாகத் தேடிச் சென்று அடைவது எப்படி? இதற்குப் பின்னணியில் உள்ள அறிவியல் செயற்பாடு என்ன என்பது குறித்து அமெரிக்கா மற்றும் ஜேர்மன் மருத்துவ விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள்.

இந்த ஆய்வுகளில் ஒரு புதிய தகவல் தெரியவந்தது.

பெண்ணின் கரு முட்டையில் இருந்து ஒரு வகை இரசாயன பொருள் வெளிப்படுகிறது. இதற்கு போர்ஜினால் (Bourgeonal) என்று பெயர். ஆணின் விந்தணுவின் நுனிப்பகுதியில் இருக்கும் மிக நுண்ணிய அமைப்பு இந்த போர்ஜினாலில் இருந்து வெளிப்படும் மணத்தைக் கண்டுபிடிக்கும் திறன் கொண்டது. எனவே, விந்தணு 'போர்ஜினால்' மணத்தை மோப்பம் பிடித்தபடி நீந்திச் சென்று கரு முட்டையை அடைகின்றது.

இந்த புதிய கண்டுபிடிப்புக் குறித்து விஞ்ஞானிகள் குழு தீவிரமாக ஆய்வு நடத்தி வருகிறது. இது தொடர்பான அனைத்து தகவல்களும் உறுதியான பின்னர் செயற்கை கருத்தரித்தல் மற்றும கருத்தடை முறைகளில் புதிய அணுகுமுறையைக் கையாளமுடியும் என்பது டாக்டர்களின் கருத்தாகும்.

சோதனைச்சாலையில் இது தொடர்பாக ஆய்வுகள் நடந்துவருகின்றன என்றும் எதிர்காலத்தில் குழந்தை இல்லாதவர்கள் எளிய மருத்துவ முறையில் குழந்தை பெற்றுக்கொள்ள வழி பிறக்கும் என்பது டாக்டர்களின் கருத்து. அதேபோல கருத்தடை முறைகளும் மிக எளிதாக இருக்கும் என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர்.

**தயாரிப்பு : கனிமொழி**

# செல்போன் கடிகாரம்



தகவல் தொடர்பு கருவிகளில் ஒன்றான தொலைபேசிக் கருவியின் பரிணாம வளர்ச்சிதான் செல்லிடப்பேசிகள். உரையாடல் செய்யப்பயன்படும் வகையில் இருந்த செல்லிடப் பேசிகள் தற்போது 'ஹைடெக்' கருவியாக மாறிவிட்டது. செல்போனில் படமெடுக்கும் கமெரா, இசை கேட்கும் வசதிகள், இன்ரர்நெட் வசதிகள்... என்று பல நவீன வசதிகள் புகுந்து விட்டன.

நவீன செல்போனின் புது அவதாரம்தான் இந்த மணிக்கூட்டு செல்போன். கையில் கடிகாரம் போல அணிந்து கொள்ளலாம். அதையே செல்போன் போலவும் பயன்படுத்திக் கொள்ளலாம். கடிகார செல்போனை கணனியுடன் இணைத்தும் நாம் பயன்படுத்த முடியும்.

ஜப்பானில் உள்ள நிறுவனம் ஒன்று 'ரிஸ்டோமோ' என்ற பெயரில் இந்த செல்போன் கடிகாரத்தைத் தயாரித்துள்ளது.

# கொண்டாட்டம்



இலோவக்கியா நாட்டில் ஈஸ்டர் பண்டிகையையொட்டி வித்தியாசமான ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் நடைபெற்றது.

அங்குள்ள கிராமங்களில் வாலிபர்கள் வீடுவீடாகச் சென்று - இளம் பெண்களின் கைகளைப் பிடித்துக்கொள்ள மற்றவர்கள் பக்கெட்டுக்களில் தண்ணீரை வாரி இறைத்து உற்சாக நடனமாடினார்கள்.

அடடா! இப்படியெல்லாம் நம்மூரில் கொண்டாட்டம் இல்லையே என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறது நம் இளசு ஒன்று.

# அட! அப்படியா!!

## வேலை பார்க்கும் நாய்




வேலை இல்லாத் திண்டாட்டம் உலகம் முழுவதும் தலைவிரித்தாடுகிறது. சாதாரண வேலைக்குக் கூட பலர் போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது. நவீன மயமாக்கல், கணனி மற்றும் எந்திரங்களின் பயன்பாடு அதிகரித்த பின்னர் வேலை வாய்ப்புகள் குறைந்து போயின.

இந்த நிலையில், ஜப்பான் நாட்டில் உள்ள கணனி நிறுவனம் 3மாத பெண்நாய் ஒன்றுக்கு வேலை கொடுத்துள்ளது. 'வெண்டி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நாய், வாரத்துக்கு இருமுறை அலுவலகம் வரவேண்டும். அங்கு ஊழியர்களுடன் விளையாடி அவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்.

சமீபத்தில் இந்த கணனி நிறுவனம் 40 புதிய நபர்களை வேலைக்குச் சேர்த்துக்கொண்டது. அப்போது 'வெண்டி' நாய்க்கும் நியமனம் கொடுக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த நாய் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து 'வெண்டி'க்கு இந்த வேலை கிடைத்துள்ளது.

புதிய ஊழியர்கள் அறிமுக நிகழ்ச்சி மற்றும் வேலைக்கான உத்தரவு, அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சியில் 'வெண்டி'யும் கலந்து கொண்டது. அப்போது கழுத்தில் அடையாள அட்டை தொங்க 'வெண்டி' போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்த காட்சியை படத்தில் காணலாம்.

## நிதி திரட்ட இதுவும் வழி



உலக மக்களை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று புற்று நோய். வயது வித்தியாசமின்றி ஆண், பெண் பேதமின்றி லட்சககணக்கான பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய்க்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்க பல்வேறு அரசு, பொதுநல மற்றும் தனியார் அமைப்புகள் ஆய்வு நடத்தி வருகின்றன. புற்றுநோய் தடுப்பு ஆராய்ச்சிக்காக நிதி திரட்ட புதுமையான முயற்சி ஒன்று சமீபத்தில் கையாளப்பட்டது.

புதிய பாணியில் மக்களைக் கவரும் வகையில் உருவாக்கப்பட்ட 'பிரா'க்கள் ஏலம் விடப்பட்டன. நியூயோர்க் நகரிலுள்ள உலகப் புகழ் பெற்ற ஏல நிறுவனமான சோத்பீஸ் நிறுவனம் இந்த புதிய பாணி 'பிரா'க்களை ஏலம் விட்டது. சுமார் 100ரூபாய் முதல் 2லட்சம் ரூபாய் வரையிலான 49விதமான 'பிரா'க்கள் ஏலம் விடப்பட்டன. அந்த 'பிரா'க்களில் சிலவற்றை இங்குள்ள படத்தில் காணலாம்.

1. பூக்களை வண்டுகளும் தேனீக்களும் மொய்ப்பது இயற்கைதானே. அதுபோன்ற கற்பனையில் பூ, வண்டு, இணைந்த 'பிரா' இது. இந்த 'பிரா'வில், இணைக்கப்பட்டுள்ள பற்றரி மூலம் வண்டு ரீங்காரம் இட்டு பறக்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது. 2. 'கிற்றார்' இசைக்கருவியைப் பயன்படுத்துபவர்கள் அதன் நரம்புகளை தட்டி ஓசையெழுப்ப சிறிய பிளாஸ்டிக் தகடுகளை பயன்படுத்துவதுண்டு. இளஞ்சிவப்பு நிறத்தில் இருதய வடிவில் உருவாக்கப்பட்ட 150இற்கும் மேற்பட்ட தகடுகள் மூலம் இந்த 'பிரா' வடிவமைக்கப்பட்டுள்ளது. 3. கைகள் மூலம் மார்பை மறைத்துக்கொள்வது போன்ற 'பிரா'. 4. இது டெலிபோன் அல்ல, டெலிபோன் பாணியில் உருவாக்கப்பட்ட 'பிரா'.


## பின்னழகு செய்தி



இளைய தலைமுறையினர் கவர்ச்சிகரமான வாசகங்கள் கொண்ட ரீசேட் மற்றும் பனியன் அணிவதில் ஆர்வம் காட்டுவதுண்டு. தற்போது தாங்கள் அணியும் கால்சட்டை மற்றும் முழுக் கால் சட்டைகளிலும் கவர்ச்சிகரமான வாசகங்கள் எழுதிக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். பிரிட்டனில் இத்தகைய பின்னழகு வாசகப் பஷன் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. இளம் பெண்கள் குறும்பு வாசகங்களை ஜீன்ஸ்களில் எழுதி அணிந்து கொள்கின்றனர்.

ஒரு காலத்தில் முன்னழகு வாசகங்கள் பரபரப்பாகப் பேசப்பட்டன. இப்போது காலம் மாற மாற பின்னழகு வாசகப் பஷன் தொடங்கிவிட்டது.

# மூளை இருக்கா?



யாராவது தவறு செய்துவிட்டால், அதைக்கண்டு நாம் கோபம் அடைகின்றோம். கோபம் அதிகமாகும் போது தவறு செய்தவனை நோக்கி 'உனக்கு மூளை இருக்கா இப்படி தவறு செய்து விட்டாயே?' என்று திட்டுகிறோம்.


இப்படி 'மூளை இருக்கா?' என்று கேட்பதற்கு காரணமும் நமது மூளைதான். நாம் செய்யும் செயல் எதுவாக இருந்தாலும், அதைச் செய்ய தூண்டுதலாக, இன்னும் சொல்லப் போனால் காரணமாக இருப்பதும் மூளைதான்.

நம் உடலையும், உள்ளத்தையும் ஆட்டுவிக்கும் 'மூலச் சூத்திரதாரி' நம் மூளையே. அந்த மூளை ஏவுகின்றபடி எல்லாம் நாம் செயற்படுகிறோம்.

இப்படி பல சிறப்புமிக்க மூளை, மனிதனின் உடலில் எப்போது, எப்படி, உருவாகி வளர்ந்து, எந்த வகையில் வலுப்பெறுகிறது, வளம் அடைகிறது என்பதெல்லாம் சுவையான தொடர் நிகழ்வுகளாகும்.

மனித உடல் வளர்ச்சியில் முதன் முதலில் வளருவது எது தெரியுமா? மூளைதான்.

தாயின் கருப்பையில் ஒரு (குழந்தை) கரு உருவாகும் போதே மூளைதான் முதலில் உருவாகி வளரத் தொடங்குகிறது. கருவில், உடலின் மற்ற பகுதிகளின் வளர்ச்சியைவிட மூளையின் வளர்ச்சியே முதலிடம் பெறுகிறது. இதேபோல உடலின் மறற அங்கங்களின் வளர்ச்சியை விட மூளையின் வளர்ச்சியே விரைவாகவும், விரிவாகவும் ஏற்படுகிறது. ஒரு குழந்தை கருவில் இருக்கும்போது, கருத்தரித்த 18ஆவது நாளிலேயே மூளையின் உருவாக்கமும், வளர்ச்சியும் தொடங்கி விடுகின்றன. 6மாதத்தில் குழந்தையின் மூளை ஒலி மற்றும் அதிர்வுகளை பதிவு செய்யும் தகுதியைப் பெற்று விடுகிறது.



9ஆவது மாதத்தில் குழந்தையின் உடல் உறுப்புகள் அனைத்தும் முழு வளர்ச்சி பெற்று, 10ஆவது மாதத்தில் குழந்தை பிறக்கத் தயாராகிவிடுகிறது.

முழு வளர்ச்சியடைந்த மூளையில் 110கோடி நரம்பு அணுக்கள் இருப்பதாக நரம்பியல் வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். இவை அனைத்தும் 9மாத கருவில் இருக்கும்போதே உருவாகி விடுகின்றன. இந்த நரம் பணுக்கள் 'நிலிரோக்லையா' என்ற மூளை ஆதார திசுவில் இருந்து உருவாகிறது.

மூளையின் செயற்பாடுகளுக்கு இந்த நரம்பணுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாம் அவ்வப்போது வெளிப்படுத்தும் நுண்ணறிவு, உணர்வு நிலை, நினைவாற்றல், உடல் உறுப்புகளை கட்டுப்படுத்தும் திறன், அவைகளின் இயக்கத்தை கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை செயற்படுத்துவது இந்த நரம்பணுக்கள் தான். மேலும் மூளையின் உத்தரவுகளை உடலின் மற்ற பகுதிகளுக்கு எடுத்துச்சென்று மூளை-உடல் இயக்க தொடர்புகளை செய்வதும் இவைதான்.

இந்த நரம்பணுக்களின் பெருக்க வளர்ச்சி குழந்தை பிறந்த உடன் முடிவடைந்து விடுகிறது. அதன்பின் அதில் ஏதேனும் பழுது ஏற்பட்டால், அதற்குப் பதிலாக வேறு நரம்பணு உருவாகி ஈடுசெய்வதில்லை. கருவில் இருக்கும்போது மூளை வளர்ச்சிக்குரிய அமைப்பு முழுமையாக உருவான நிலையில் குழந்தை பிறக்கிறது. அதன்பின் அந்த குழந்தையின் மூளை வளர வளர மூளை எடையும் வளரத் தொடங்குகிறது.

குழந்தை பிறக்கும்போது இருக்கும் எடையை விட சுமார் 3மடங்கு எடையை ஒரு வயது நிரம்பும்போது அந்தக் குழந்தை பெறுகிறது.

இந்த துரித வளர்ச்சிக்கு காரணம் என்ன? வளர்ச்சி வேகத்தை எது ஊக்குவிக்கிறது? வேறென்ன ஊட்டச்சத்துதான்.

4அல்லது 5வயது வரை நல்ல ஊட்டச்சத்து உணவுடன் வளர்க்கப்படும் குழந்தைக்கு மூளை வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சரியான சத்துணவு உட்கொள்ளாத குழந்தைகளின் மூளைவளர்ச்சி பாதிப்படைகிறது. வளர்ச்சி குறைந்து விடுகிறது. அத்தகைய குழந்தைகள்தான் மந்த புத்தியுள்ளவர்களாக வளர நேரிடுகிறது.

இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பான விஷயம் என்னவென்றால்...

ஒரு குழந்தை பிறந்ததில் இருந்து தொடர்ந்து 5ஆண்டுகள் சத்துணவு சாப்பிட்டு வரும்போது குறிப்பிட்ட அளவு மூளை வளர்ச்சி அடையும். 5ஆண்டுகளுக்குப்பிறகு அந்த குழந்தை சத்து குறைவான உணவுகளை உட்கொண்டாலும் ஏற்கனவே (5ஆண்டில்) பெற்ற மூளை வளர்ச்சி எந்த காரணத்திலும் குறைவதில்லை. ஒரு முறை பெற்ற மூளை வளர்ச்சி வாழ்நாள் முழுவதும் தொடரும்.

எனவே, மூளை வளர்ச்சிக்கும் சத்துணவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை நாம் நன்கு அறிந்துணர வேண்டும்.

மூளை வளர்ச்சிக்கு மட்டுமல்ல, கருவில் உருவாகி வளரும் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் சத்துணவு அடித்தளமாக அமைகிறது.

கருவில் இருக்கும் குழந்தைக்கு தாய் மூலம் உணவைக் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆங்கிலமொழி, கணனித்துறையில் இலங்கை பின் தங்கியுள்ளது!

## அமைச்சர் கொடித்துவக்கு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.23

ஆங்கிலம், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இந்தியாவை விட இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் மனித வள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு. கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் தகவல தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகப் புகுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

பின்தங்கிய இடங்களில் போதிய வசதிகள் இல்லாமையால் இந்தப் பாடத்தை எல்லாட் பாடசாலைகளிலும கட்டாய பாடமாக்க முடியாமல் உள்ளது. அதனை ஒரு தேர்ந்தெடுக்கும் பாடமாக இதனைக் கற்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் ஆயிரத்து 200 பாடசாலைகளில் கணனிக் கல்வி போதிக்கப்படவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 5ஆண்டுகளுககுள் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரையிலான வகுப்புகளைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் கணனி மையங்கள் அமைக்கப்படும்.

வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்களில் சுமார் 90வீதமானவர்கள் ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் போன்றவற்றில் போதிய அறிவின்மையால் சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். (ஒ-4)

## வடமராட்சி தெற்கு, மேற்கு இளைஞர்களுக்கு!

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தினால் மரவேலை, கட்டுமானப்பணி ஆகிய இரு பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இருபயிற்சி நெறிகளுக்கும் இப்பிரிவில் வசிக்கும்18-30 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விணணப்பதாரி தனது பிரிவு கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலருக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் கால எல்லை 6மாதங்களாகும். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா ஆயிரம் வழங்கப்படும என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-36)


## யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தின் பெண்களுக்கான அலுவலக முகாமைத்துவ கற்கைநெறி

வறுமை காரணமாக உயர் கல்வியைத் தொடர முடியாத பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு எமது மையத்தினால் இக்கற்கைநெறி முற்றுமுழுதாக இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இதனூடாக பெண்கள் முகாமைத்துவம் சார்ந்த துறையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கம்.

பின்வரும் தகைமைகள் ஆர்வலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

- க.பொ.த. உயர்தர சித்தி
- ஆங்கிலத்தில் போதுமான அறிவு
- முகாமைத்துவத்துறையில் தொழில் செய்யும் ஆர்வம்

விண்ணப்பத்தாரிகள் சுயவிவரக் கோவையுடன், குடும்ப நிலையை உறுதி செய்யும் அத்தாட்சிப்பத்திரத்தையும் 28.04.2003 இற்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

JSAC.
159, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

T.P. No: 021-2223699 (C/27520)


# மூளை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கும் நச்சுக் கொடி உருவாகி முழுவளர்ச்சி அடைந்த உடன் சத்துணவு பிரச்சினையும் தலைதூக்குகிறது.

கரு உருவானதில் இருந்து 6வாரத்தில் அந்தக்கரு மனித வடிவத்தைப் பெறுகிறது. அந்த சிசு, தனக்குத் தேவைப்படும் சத்துணவை நசசுக்கொடி மூலம் பெறுகிறது. வட்ட வடிவிலான குழாய் போன்ற தற்காலிக உறுப்பான நச்சுக்கொடியோடு தாயின் ரத்தக்குழாய்களும் பின்னிப் பிணைந்துள்ளன. இதன் மூலமே குழந்தைக்கு ஊட்டச்சத்துடன் பிராணவாயு(உயிர் வளி) ஹோர்மோன் என்னும் 'இயக்கு நீர்' முதலியன உட்செல்கின்றன. ஓர் இரத்தக்குழாய் தொகுதி மற்றோர் இரத்தக் குழாய்த் தொகுதியுடன் இணைவதால் சிசுவின் கழிவுப்பொருள்கள் வெளியேற, குழந்தை வளமான வளர்ச்சி பெறுகிறது.

தாயின் கருவிலிருக்கும் குழந்தைக்கு போதுமான சத்துணவு போய்ச் சேரவில்லை என்றால் அது சிசுவின் உடல் வளர்ச்சியை மட்டுமல்ல, மூளையின் வளர்ச்சியையும் வெகுவாகப் பாதிக்கும் என்ற உண்மையை நம்மில் பெரும்பாலோா உணருவதே இல்லை என்பது வருந்தத்தக்க நிலையாகும்.

மனித மூளையின் வியப்பூட்டும் வளர்ச்சி விகிதத்தை இங்குள்ள அட்டவணை மூலம் அறியலாம்.

வயது மூளையின் எடை(கிராம்) பிறக்கும்போது -340, 6மாதம் -750, ஓர் ஆண்டு -970, 2ஆண்டு -1150, 3ஆண்டு -1200, 6ஆண்டு -1250, 9ஆண்டு -1300, 12ஆண்டு -1350, 20ஆண்டு -1400.

சிலரின் மூளை பருமனாகவும், சிலரது மூளை சிறிய அளவினதாகவும் இருப்பதுண்டு. மூளைப் பருமனை வைத்து அறிவு வளர்ச்சியைக் கணக்கிடுவது தவறு. மூளை பெரிதாக இருப்பவர்களில் முட்டாள்களும் உண்டு. மூளை சிறிதாக இருப்பவர்களில் மாமேதைகளும் உண்டு. எனவே, மூளைப்பருமனுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் அதிகத் தொடர்பு இல்லை.

(ம)

# சங்கானையில் பாதீனியம்

வலி.மேற்கு,ஏப்.23

சங்கானையில் பெருமளவு பாதீனியம் களை வயல் நிலங்களிலும் வீதியோரங்களிலும் காணப்படுகின்றது. இதனை முற்றாக அழிப்பதற்கு விவசாயத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கானையிலுள்ள மண்டியக் குளத்துக்கு அண்மையிலுள்ள வயல் நிலங்களிலும் வீதியோரங்களிலும் பெருமளவு பாதீனியம் களை காணப்படுகிறது.

இதற்கு முன்னர் பல தடவைகள் விவசாயிகள் பாதீனியம் களையினை அழித்தும் தொடர்ந்தும் முளைத்து வருகின்றது. இதனால் இதனை முற்றாக அழித்து மீண்டும் வளராமல் தடுப்பதற்கு விவசாயத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகளும பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-175)


## ரிஷிகாளான் (DXN) மூலிகை உப உணவு விரிவுரையும் - கலந்துரையாடலும்

விரிவுரை வழங்குபவர்: திருமதி ஜெயந்தி நடராசன்
(DXN இலங்கை இந்திய விற்பனை முகவர்)

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

காலம்: நாளை (24-04-2003) வியாழன் காலை 10 மணி

அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

ச. பரமநாதன்
யாழ். விற்பனை முகவர்

(சி-25719)



DXN

## கருத்தரங்கு

மருத்துவ சக்தி வாய்ந்த மூலிகைகளின் அரசன் (King - Herbs) என வர்ணிக்கப்படும் கனடோமா (Ganaderma) என்ற காளானைப் பற்றிய கருத்தரங்கு திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நாளை (24.04.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*துன்னாலை, கரவெட்டி* (17106)

உ. பாலசுப்பிரமணியம்
(விற்பனை முகவர்)



## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது அன்பு நண்பன் பு.சஞ்செயன்
அவர்களின் ஆருயிர்ச் சகோதரி

### செல்வி சபீனா புஸ்பராஜா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தரம் 11E ஆசிரியரும், மாணவர்களும்,
யாழ்.இந்துக் கல்லூரி.

(17104)



## ஆழ்ந்த அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் ஐ.திருவாசகநாதர்
அவர்களின் அன்பு மாமனார்

### சி.கணபதிப்பிள்ளை

அவர்களின் மரணச் செய்தியறிந்து பெரும் கவலை கொள்ளும் அதேநேரம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அறிவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயம்.

(17110)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திரு.கந்தையா நடராஜா
(மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### குமாரவேலு கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் அத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.* (சி-27522)

யாழ்.மாவட்டச் செயலக ஊழியர்களும், நலன்புரிக்கழக உறுப்பினர்களும.



## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் கமலதாஸ் (ராஜா)

(தாவடி சிவசக்தி சனசமூக நிலையச் செயலாளரும், தாவடி மரக்காலை உரிமையாளரும், சிறந்த சமூக சேவையாளனும்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கமலதாஸ் (ராஜா) அவர்கள் 21-04-2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.மகாலிங்கம் மற்றும் நாகம்மா அவர்களின் அன்புப் புதல்வனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் பிரபாகரச் சோழன், தமிழரசி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சந்திரமலர் (லெபனான்), ஜெயதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் சி. இராசேந்திரத்தின் மைத்துனரும் சங்கரப்பிள்ளை - சிவபாக்கியத்தின் மருமகனும் சி.கந்தசாமி - பூரணம் அவர்களின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-04-2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, தாய்.

இணுவில் மேற்கு. (17107)



## வடகிழக்குத் தொழில்நுட்பம் (NET)

### யாழ்.நகரில் உதயம்!

**NET CAFE** (24 மணிநேர இன்ரநெற் சேவை) நிமிடம் ரூபா 10 மட்டுமே!

அங்கத்தவர்களிற்கு சலுகைக் கட்டணங்கள்!

**VEDIO CONFERENCE, NET MEETING** மூலம் உலகெங்கிலும் உள்ள உறவினர்களைப் பரஸ்பரம் பார்த்துக்கொண்டே பேச!

தொடர்பு

0777 - 708498 *(HOTLINE)*
34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

NET Working, LAN, WAN, SOHO, Net 2 Phone சகலவித கனனிகளுக்கிடையேயான வலைப்பின்னல் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள், சேவைகள் தரமான Design களிற்கும் நாடுங்கள்.

சகலவித P-I, II, III, IV கணனிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள் தரமான திருத்த வேலைகளிற்கும்,

Mobile Phones, Nohia, Motorola, Ericsson, Sony Ericsson போன்ற சகல செலுலர் தொலைபேசிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் - Mobile Phone unlocking சேவைகள் (lock உடைத்தல்) போன்றவற்றிற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

வேலை வாய்ப்புக்கள்:- மேற்படி தொழில்நுட்பங்களில் ஆர்வம், அனுபவம் மிக்கவர்கள் தங்கள் சுயவிவரங்களை 7 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
**வடகிழக்குத் தொழில்நுட்பம்,**
*34, சட்டநாதர் வீதி, நல்லூர், யார்ழ்ப்பாணம்.*

(சி-27521)

# பேச்சை இடைநிறுத்தும் புலிகளின் முடிவை தமிழ்க் காங்கிரஸ் கட்சி வரவேற்கின்றது

## விநாயகமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு புலிகள் எடுத்த முடிவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வரவேற்கின்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்களை பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பாகும். அவ்வாறு மேற்கொள்வதன் மூலமே சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள கட்சிப் பணிமனையில் நேற்றுமாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஏற்கனவே இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள், நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் தொடர்ந்து பேசுவதில் என்ன பயன் இருக்கப் போகிறது. இந்த விடயத்தில் தற்போது பந்து அரசின் பக்கமே உள்ளது.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதனை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் அமைக்கப்பட்டதே தமிழ்க கட்சிகளின் கூட்டமைப்பு.

விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் அவர்களுடன் மட்டுமே இடம்பெறவேண்டும் என்பதும் எமது கட்சிக் கொள்கையாகும். எமது இந்த நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலேயே நாமும் அதில் இணைந்து கொண்டோம். மேலும் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பான தீர்க்கமான முடிவுகள், புலிகளுடன் ஆலோசித்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அதிலிருந்து விலகுகின்ற தன்மை அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டுள்ளது. யாழ்நூலகத் திறப்புவிழா போன்ற கசப்பான சம்பவங்கள் அதன விளைவாக நேர்ந்தவையே.

புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதனையே நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலும் வெளிப்படுத்தியது. இத்தகைய சூழலில் புலிகளின் பலத்தை குறைக்கின்ற எத்தகைய விடயங்களையும் நாம் மேற்கொள்ளுதல் கூடாது.

கூட்டணியின் முன்னாள் தலைவர்கள், புலிகளால் பாதிக்கப்பட்டதாக ஆனந்தசங்கரி இப்போது கதைவிடுவது ஏற்கத்தக்கதல்ல. புலிகளைப் பொறுத்தவரை அந்தக் காலத்துக்கு ஏற்றவாறு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அவை குறித்து இப்போது விமர்சிப்பது தேவையற்றது.

கூட்டணித்தலைவர் ஆனந்தசங்கரியின் அண்மைக்கால நடவடிக்கைகள், புலிகளுக்கு எதிரான அணியொன்றை உருவாக்க முயற்சிக்கும் இந்தியா போன்ற சக்திகளின் முயற்சிக்கு அவர் துணை போவதாக சந்தேகங்கொள்ள வைக்கிறது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை அனைத்து அமைப்புகளும் ஜனநாயக ரீதியில் செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது. நாங்கள் கூட எமது கட்சிச் செயற்பாடுகளை எந்தவித தடையுமின்றி - சுதந்திரமாக - மேற்கொண்டு வருகிறோம். கூட்டமைப்பு வன்னியில் முதல் தடவையாக சந்தித்தபோது தேசியத் தலைவர் பிரபாகரன் சொன்னார். "சகல கட்சிகளும் தமது தனித்துவத்தைப் பேணிக்கொள்ள முடியும்". ஆனந்தசங்கரி கூறுவது போல புலிகள் எம்மை 'இரு' என்றும் 'எழும்பு' என்றும் சொன்னது கிடையாது. முடிந்தவரை நாம் சுதந்திரமாக இயங்கிவருகிறோம்.

ஆனால், அரசுக்கு கூலிப்படையாக இருக்கும் ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகள், தாம் அரசியல் நடத்த வேண்டும் எனக் கோருவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அரசிடம் மாதாந்தம் 37 லட்சம் ரூபாவுக்கு மேல் கைக்கூலி பெறும் இவர்களுக்கு, தமிழர் உரிமை குறித்துப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

- இவ்வாறு அ.விநாயகமூர்த்தி கேள்வி எழுப்பினார்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட கட்சிப் பிரமுகர் சி.வி.கே.சிவஞானம் கருத்துத் தெரிவிக்கையில் -

புலிகள், தமிழ் மக்களுடைய ஏகப் பிரதிநிதிகள் மட்டுமல்ல ஏகப் பலமும் அவர்களே. உள்ளூராட்சித் தேர்தல்களானாலும் சரி, பொதுத் தேர்தல்களானாலும் சரி, கூட்டமைப்பில் இணைந்தே போட்டியிட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. எமக்குள் கருத்து வேறுபாடுகள் இருநதால் அதனை எமக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்வதே ஆரோக்கியமான செயற்பாடாக அமையும் -என்றார்.(ஐ-9)

## நவாலி வித்தியாலயம் கஷ்டப்பிரதேசப் படி பெற அங்கீகாரம்

மானிப்பாய்,ஏப்.23

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை 10 வீத கஷ்டப் பிரதேசப் படி பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கடிதம் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைசசினால் அனுப்பப்பட்டுள்ளது.

(ஓ-90)

## நீர்வேலியிலிருந்து மேதினப் பேரணி

யாழ்ப்பாணம்,ஏப்.23

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேதினத்தன்று முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோவில் சனசமூக நிலையத்திலிருந்து மேதினப் பேரணி ஆரம்பமாகும் என்றும் -

பேரணி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தை அடைந்து, அங்கு பொதுக்கூட்டம் ஆரம்பமாகும் என்றும் -

மேற்படி சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## செல்வா நகரில் நேற்று துப்பாக்கிச் சூடு

திருகோணமலை,ஏப்.23

மூதூர் பிரதேசத்திலுள்ள தோப்பூர் செல்வா நகர் என்னுமிடத்தில் சேருநுவர கால்வாய்க்குக் குளிக்கச் சென்ற ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்ட ஒரு சம்பவம் நேற்றுக்காலை 7.40 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தில் ஒரு பெண்ணும் படுகாயமடைந்தார் எனக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தையடுத்து சற்றுப் பதற்றம் நிலவுகின்றது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் வரவழைத்து அவர்களுடன் பாதுகாப்பு நிலைமையை ஆராய்ந்தார்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 1995 இல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும்படி பாதுகாப்புப்படைகளின் தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் ஜனாதிபதி பணித்தார்.

(ஐ-12)

## பொலீஸாரைத் திருப்திப்படுத்திவிட்டு

# மக்களின் நிம்மதியைக் குலைக்கும் செயல்களில் எவரும் ஈடுபடக்கூடாது!

## அரசியல்துறை பிரமுகர் எச்சரிக்கை

வலி.வடக்கு,ஏப்.23

ஸ்ரீலங்காப் பொலீஸாரைத் திருப்திப்படுத்திவிட்டு மக்களின் நின்மதியைக் கெடுக்கும் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடக்கூடாது. பாலியல்குற்றங்கள், கொலை, கொள்ளைகள், அடாவடிகள் போன்றவற்றில் ஈடுபடுவோரைக் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

- இவ்வாறு எச்சரித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த ரமேஷ்.

சுன்னாகம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரச்சினைகளைக் கண்டு பயந்து நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. நாமும் உலக ஒழுங்கின் பிரகாரம் செயற்பட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அந்த வகையில் உலக ஒழுங்குக்கு மாறி போராட்டத்தை மாற்று வடிவத்திற்கு கொண்டுசென்றுள்ளோம்.

உலக நாடுகள் மாறியதைப் போன்று நாங்களும் மாறவேண்டும். மாறாது இருப்போமாக இருந்தால் இந்த மண்ணும் ஆப்கானிஸ்தான் போன்ற அழிவைச் சந்திக்க நேரிடும்.

உலக ஒழுங்கில் இருந்து யாரும் விடுபட முடியாது. இன்று அமெரிக்காவுக்கும் ஈராக்குக்கும் இடையே நமது நாட்டில் இருந்து எத்தனையோ மைல்களுக்கு அப்பால் - சண்டை நடக்கிறது. ஆனால், அப்போரின் எதிரொலியாக சுன்னாகம் எரிபொருள் நிலையத்தில் மக்கள் எரிபொருள் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நின்றதை காணமுடிந்தது.

கடந்த ஏழு ஆண்டுகளாக மக்கள் சொல்லமுடியாத துன்பங்களையும் சுமைகளையும் சுமந்துள்ளனர். இதற்கு யாழ்பாணம், வன்னி, கொழும்பு என்று வேறுபாடு இல்லை. தமிழ் மக்கள் என்ற வகையில் ஏதோ ஒரு வழியில் துன்பங்களைச் சுமந்து கொண்டே வாழ்ந்துள்ளார்கள்.

தமிழர்களின் எதிர்காலம் பற்றி யார் பலத்துடன் இருந்து கோரிக்கைகளை முன்வைக்கின்றார்களோ அவர்களுடன்தான் உலக நாடுகள் பேச்சு நடத்தும். இந்த வகையில் தான இங்கு வருகின்ற உலக நாடுகளின் பிரதிநிதிகள் எங்களுடனும் பேச்சுக்களை நடத்திவருகின்றார்கள்.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாகவும் பலம் மிக்க சக்தியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் வைக்கும் கோரிக்கைகள் வலுவுடையதாக இருக்கமுடியும்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களினால் நடத்தப்பட்ட "பொங்குதமிழ்" நிகழ்வு தென்பகுதி அரசியல் கட்சிகளையும், அரசாங்கத்தையும், இராணுவத்தையும் மட்டும் கதிகலங்கச் செய்யவில்லை. உலக நாடுகளிலும் கூட இந்நிகழ்வு தாக்கத்தை உண்டாக்கியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளாக தமிழ் மக்கள் பல்வேறு வடிவங்களிலும் தமது உரிமைக்கான போராட்டங்களை நடத்திக்கொண்டே இருக்கின்றார்கள்.

முன்னர் ஏ-9 பாதை தடைசெய்யப்படவில்லை, மின்சார வசதிகள் இருந்தன. போக்குவரத்து வசதிகள் இருந்தன. ஆனால், ஓர் இறுக்கத்தை ஏற்படுத்திவிட்டு அதனைத் தளர்த்தும் போது ஏதோ முன்னில்லாத ஒன்று தற்போது கிடைத்ததைப் போன்று எண்ணம் தோன்றுகிறது.

இந்த நிலைமையே தற்போதும் ஏற்பட்டுள்ளது. இதனை வைத்து தமிழ் மக்களுக்கு எல்லாம் கிடைத்து விட்டதாகக் கூற முடியாது. உண்மையில் எமக்கு ஒன்றும் இன்றுவரை கிடைக்கவில்லை.

ஒரு கதைகூற விரும்புகின்றேன்.

குரு ஒருவரிடம் சிஷ்யன் ஒருவன் இருந்தான். சிஷ்யன் இருந்த அறை மிகவும் சிறியதாக இருந்தது. ஒரு நாள் குரு. 'உன்னுடைய அறையில் இன்னும் இரண்டுபேரை தங்கவைக்கப் போகின்றேன்' என்று சிஷ்யனிடம் கூறினார்.

அதற்கு சிஷ்யன் 'எனது அறை மிகவும் சிறியது. வசதிகள் குறைந்து காணப்படுகின்றது' என்றான். அதற்குக் குரு 'ஒரு ஆட்டைத் தருகின்றேன் அதனை அறைக்குள் கட்டு' என்று கூறினார். அடுத்தவாரம் மேலும் ஒரு ஆட்டை அறைக்குள் கட்டச் சொன்னார்.

அடுத்தடுத்த வாரங்களிலும் இரண்டு கழுதைகளையும் அறைக்குள் கட்டவைத்தார் குரு. பின்னர் 'எப்படியிருக்கிறாய்?' என்று சிஷ்யனிடம் குரு வினவினார். அதற்கு தனது நிலைமை படுமோசமாக உள்ளதாகப் பதிலளித்தான் சிஷ்யன்.

சில நாள்களின் பின்னர் குரு, சிஷ்யனிடம் ஒரு ஆட்டை அறையை விட்டு வெளியேற்றி விடும்படி 'கூறினார். அதன் பிறகு 'எப்படி இருக்கின்றாய்?' என்று கேட்டார். 'நிலைமை பரவாயில்லை' என்றான் சிஷ்யன்.

இத்தகைய நிலைதான் இன்று தமிழ் மககளுக்கும் ஏற்பட்டுள்ளது. போராட்டம் ஆரம்பிக்கும் போது எத்தகைய நிலைமை தமிழ் மக்களிடையே காணப்பட்டதோ அதே நிலைமைதான் இன்று காணப்படுகின்றது. முன்பு இருந்த நிலைமையில் இறுக்கத்தைக கொடுத்து தளர்த்தப்பட்டுள்ளதே அன்றி எந்த மாற்றமும் இம்மண்ணில் ஏற்படவில்லை.

உலக நாடுகள் பலவும் இம்மண்ணில் குழப்பங்களும், அமைதியின்மையும் காணப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை உடையனவாகவே உள்ளன. இவ்விடயத்தில் நாம் ஒவ்வொருவரும் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

தமிழர்களுக்கான நிரந்தரமான அரசியல் எதிர்காலம் ஒன்று கிடைக்கும் போதே நாங்களும் ஏனைய நாட்டு மக்களைப் போன்று தரமும் வளமும் உடைய முன்னைய மக்களாகவே மாறமுடியும். இன்று நாம் ஒரு நுகர்வு மக்களாகவே காணப்படுகின்றோம். கொழும்பில் இருந்து எடுத்துவரப்படும் பொருள்களை பயன்படுத்தும் மக்களாகவே இருக்கின்றோம். இந்நிலைமையில் தொடர்ந்து நாம் வாழமுடியாது.

என்று நாம் பொருள்களை உற்பத்தி செய்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோமோ, அன்றே நாமும் இந்த உலகில் தலைநிமிர்நது நிற்கமுடியும்; வாழ முடியும் என்பதை சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும். அயல் நாடுகளுடன் இந்தியா முரண்படுகின்றபோது. அனைத்து மாநிலங்களும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே கொள்கையின் கீழ் செயற்படுகின்றன. அத்தகைய தேசியத் தன்மை இங்குள்ள தமிழ் மக்களிடம் காணப்படவேண்டும் என்றார் ரமேஷ்.

(ஒ-86)

## புலிகள் தெரிவித்திருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையே, அன்ரன் பாலசிங்கத்தின் கடிதம் நேற்றுமுன்தினம் கிடைத்ததை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் அவசர ஆலோசனைகளை மேற்கொண்டார்.

அமெரிக்காவிலிருக்கும் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழிலநுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, லண்டனில் தங்கியிருந்த அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிரதமர் ஆலோசனை நடத்தினார்.

லண்டனில் தங்கியிருந்த அமைச்சர் பீரிஸ், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஏழாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேச்சு நடத்தவிருந்தார். ஆயினும், பாலசிங்கத்தின் கடிதத்தை அடுத்து அவரது சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

(ஐ)

## போர் மூண்டுவிடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு வந்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் அரசியல் சூழ்நிலை தீவிரமடையப் போகின்றது. தேன் நிலவு காலம் முடிவடைந்துவிட்டது. கடந்த ஒரு வருட காலமாக நாம் கடைப்பிடித்து வந்த நெகிழ்ச்சித் தன்மைக்கு முடிவு ஏற்பட்டுள்ளது. நெருக்கடி நிலையும் தீவிரமான சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலமாக இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாததால், ஏற்பட்டுள்ள அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்துவதற்காகவே பேச்சுக்களில் கலந்துகொள்வதை இடைநிறுத்தியுள்ளோம்.

கடந்த ஒரு வருட காலமாக நாம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ நல்லெண்ணம் காட்டப்படவில்லை. மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏதும் காணப்படவில்லை.

மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி கோரினோமே தவிர. படையினரை வெளியேறுமாறு நாம் கேட்கவில்லை. இன்று ஏற்பட்டுள்ள நிலைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றே கேட்கிறோம்.

எமது மக்கள் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கி, 'போர் மூலம் அல்ல, சமாதான வழியில் - பேச்சு வழியில் - தீர்வு காண விரும்புகின்றோம்' என்பதை உலகுக்கு வெட்ட வெளிச்சமாக எடுத்துக்காட்ட வேண்டும்.

குடாநாட்டில் எமது அமைப்பால் அரசியல் பணிகளை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக ஏற்பட்ட இடைவெளிக்குள் சிலர் புகுந்துவிட்டனர். அந்த இடைவெளியை நிரப்ப வேண்டும். இதற்கான பணியை முன்னெடுக்கின்றோம்.

மக்கள் நெருக்குதல்களுக்கு உள்ளாகுதல், கொள்ளை, களவு, பாலியல் வல்லுறவுகள் மத முரண்பாடுகள் என்பன இங்கு மலிந்துள்ளன. தலைமைத்துவத்தின் நேரடிக் கண்காணிப்பு இங்கு இல்லாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு எதிராக மக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்ப வேண்டும் - என்றார் பாலகுமாரன்.

(ஒ-3)

ராஜா யாழ்ப்பாணம்
குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், சிம்ரன், சுஜாதா
நடித்த
அவள் வருவாளா
(சில தினங்கள் மட்டும் காண்பிக்கப்படும்) (ரீலீஸ்)
காட்சிகள் தினசரி:
11.00, 3.00, 7.00 (பி.நே.)
(17143)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சினேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
JURASSIC PARK - 3

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், சுரேஸ்கோபி, தேவயானி,
அபிராமி, செந்தில், கவுண்டமணி நடித்த
சமஸ்தானம்
(ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/27479) T.P.: 070 212223

ஆசிரியர் தேவை
முன்பள்ளி ஆசிரியர் அனுபவமுடைய க.பொ.த. சதாரணதரம் வரை படித்த பெண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நல்லூர், யாழ்ப்பாணப் பிரதேச பிரிவுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். ஆசிரியர் நியமனம் நேர்முகப் பரீட்சை ஒன்றன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.
தலைவர்/செயலாளர்.
49/5, யாழ். வீதி,
பாலர் கல்விக்கழகம்,
(17123) யாழ்ப்பாணம்.

# இனிவரும் உதவி வழங்கும் மாநாடுகளுக்கு புலிகளின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவர்

## அமைச்சர் சந்திரசேகரனிடம் பிரதமர் உறுதி

கொழும்பு,ஏப்.23

இலங்கைக்கு உதவி வழங்கும் விடயம் தொடர்பாக இனி வரும் காலங்களில் நடைபெறுகின்ற மாநாடுகள் அனைத்துக்கும் விடுதலைப்புலிகள் அழைக்கப்படுவர்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்துள்ளார் எனவும் இந்த உறுதிமொழியைப் புலிகளுக்கு தெரியப்படுத்துமாறும் பிரதமர் தன்னிடம் கேட்டுக்கொண்டுள்ளார் எனவும் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று மாலை அமைச்சர் சந்திரசேகரன் பிரதமரை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டார்.

- புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு வன்னியில் இருந்து அனுமதி கிடைக்கப்பெற்றதும் பிரதமரின் செய்தியை தெரிவிப்பதற்காகத்தான் - இன்று அல்லது நாளை வன்னி செல்லவுள்ளதாகவும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

பிரதமருடனான சந்திப்பு தொடர்பாக அமைச்சர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியை வடக்கு - கிழக்கிற்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான விடயங்களைக் கையாளப் புலிகளின் பிரதிநிதிகள் அடங்கலான உபகுழு ஒன்று அமைக்கப்படும். இனிவரும் காலங்களில் நடைபெறும் உதவி வழங்குதல் தொடர்பான மாநாடுகளுக்கு இந்தக் குழு அழைக்கப்படும் என்று பிரதமர் உத்தரவாதமளித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தபின் அவரது கருத்துக்களைத் தனக்குத் தெரிவித்தால், புலிகளது கருத்துக்களுடன் விட்டுக்கொடுப்புடன் செயற்படலாம் எனப் பிரதமர் குறிப்பிட்டார் - என்று அமைச்சர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார். (ஐ)


இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (17082)



INTERNET BROWSING

உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் Global Informatics நிறுவனத்தின் மிகக் குறைந்த கட்டணத்தில் (மணித்தியாலத்திற்கு 50/=) உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியும் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

Gi@Netcafe

Internet Browsing Center

Global Informatics (Pte) Ltd.

379, Kasthuriyar Road, Jaffna.

(17124) T.P.: 0777-364247, 021-2225735-6



பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. தங்கராஜா ஜெயந்தன்

B.Sc. (ENG)

அவர்கள் மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் இன்று (23.04.2003) புதன்கிழமை நடைபெறும பட்டமளிப்பு விழாவில் B.Sc. (ENG) பட்டம் பெறுவதையிட்டு அவரை மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மத்திய விளையாட்டுக்கழகம், ஆவரங்கால்.

(17076)



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான - சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 6026 HOTLINE: 0777-382343

021-222 6035 072-401423

(C/27281)


### தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கலந்துரையாடல்

தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் நடை பெறவுள்ளதாக தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ரி)

### மூதூர் அகதிகளுக்கு சவூதி கூடாரங்கள்

திருகோணமலை, மூதூர் பிரதேசங்களில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கென வன்னிபுனர்வாழ்வு அமைச்சு ஒரு தொகுதிக் கூடாரங்களை அனுப்பி வைத்துள்ளது.

சவூதி அரேபியா அரசாங்கத்தினால் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கப்பட்ட கூடாரங்களிலிருந்தே இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைக்குச் சொந்தமான 'லங்கா ராணி' கப்பல் விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளதை அடுத்து அது பற்றி விசாரணை செய்து விரிவான அறிக்கையைத் தனக்குச் சமர்ப்பிக்கும்படி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கப்பல் துறை அபிவிருத்திச் செயலாளர் என்.எம்.ஜுனைடீனுக்கு பணித்துள்ளார்.

திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் ஒரு பகுதியான மட்கோவுக்கு நேற்றுமுன்தினம் சென்ற அமைச்சர் ஹக்கீம், அங்கு தரித்து நின்ற 'லங்கா ராணி' கப்பல் பற்றிச் சரியான விளக்கங்கள் அளிக்கப்படாததாலும் சட்டத்துக்குப் புறம்பாக விற்பனை செய்யப்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டிருப்பதாலும் உடனடியாக அதுபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

மூதூர் - திருகோணமலை படகு சேவையை அதிகரிக்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர் பணித்துள்ளார். (ஐ)

### உபகுழுக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டபடி கிளிநொச்சியில் நடைபெறும் என சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசும் - புலிகளும் சமர்ப்பித்துள்ள திட்டங்களில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதுவரை வடக்கு - கிழக்குக்காக முந்நூறுக்கும் மேற்பட்ட திட்டங்களை அரசு - புலிகள் ஆகிய இருதரப்பினரும் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த உபகுழுக் கூட்டத்தில் ஜப்பான் மற்றும் நோர்வே பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் - என்றார் அவர். (ஐ-12)

### புலிகளின் தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலவற்றுக்குப் புலிகள் இயக்கம் பொறுப்பு என்பது சில காலமாகவே தெளிவாகத் தெரிந்தது. சமாதானப் பேச்சுக்களில் இருந்து வாபஸ் பெறுவதற்கு புலிகள் இயக்கம் முன்வைத்திருக்கும் காரணங்கள் பலவீனமானவை என்று ஜனாதிபதி கருதுகிறார். விடுதலைப் புலிகளுடன் முன்னைய அரசாங்கங்கள் கண்ட கடந்தகால அனுபவங்கள் இதற்கு மாறுபட்டவையல்ல. தெளிவு பிறந்து, சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகி அனைத்து மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வு விரைவில் காணப்படுமென ஜனாதிபதி நம்புகிறார்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# சமாதான முயற்சிகள் கைவிடப்படமாட்டா!

## அரசுக் குழு தலைவர் பீரிஸ்

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதை புலிகள் இடைநிறுத்தியுள்ள போதிலும் சமாதான முயற்சிகள் கைவிடப்படமாட்டாது.

பேச்சுக்களில் அரசுத் தரப்புக் குழுவுக்கு தலைமைவகிக்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

லண்டனில் இருந்து நேற்று நாடு திரும்பியவேளை அவரிடம் புலிகளின் அறிவிப்புத் தொடர்பாக செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் இருந்து பின்வாங்குவதாகத் தெரிவித்துள்ள போதிலும் எந்தவித குழப்பமும் இன்றி சமாதான நடவடிக்கைகள் தொடரும்.

சில விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பிணக்குகள் தோன்றியுள்ளபோதிலும் அவ்விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு விரைவில் சிக்கல் தீர்த்துவைக்கப்படும்.

ஜப்பானில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் பங்குபற்ற வேண்டியது அவசியம். அரசுக்கும், புலிகளுக்கும் இடையே தோன்றியுள்ள சிக்கலைத் தீர்க்கும் பொறுப்பு நோர்வே சமாதானக் குழுவையே சாரும் - என்று பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஐ-12)

### சமூகக்கல்வி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.23

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சமூகக்கல்விப் பாடக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. விசேட தெரிவாக சமூகக் கல்விப் பாடத்தை பயிலும் முதலாம் மற்றும் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

### யாழ்.கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு

யாழ்.கோட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடை பெறவிருப்பதால் தவறாது சம்பந்தப்பட்டவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


தேவை

PLATEN MACHINEMINDER, BINDER தேவை.

நேரில் வரவும்

திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும்.

BHARATHI PATHIPPAKAM

OFF SET PRINTERS

430, K.K.S. ROAD,

JAFFNA. PHONE: 021-3081 (C/27490)



உங்களுக்காக.......

மீண்டும் யாழ் புண்ணிய பூமிக்கு



இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா



அவர்கள் வருகை தந்துள்ளார்!

✻ கைரேகை ✻ ஜாதகம்

✻ தொழில் முன்னேற்றம்

✻ திருமணத்தடை

✻ கல்வியால் பிரச்சினை

✻ தீராத வியாதிக்கள்

எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஏற்ற வகையில் தீர்வுக்கு

ஒரு முறை விஜயுங்கள் உண்மை புரியும்

சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மடோனா லொட்ஜ்

ஸ்ரீமுருகன் ஜ"வல்லர்ஸ் / லிங்கன் கூல்பார்.

அருகில்

யாழ்ப்பாணம்.

(17102)


## மரண அறிவித்தல்

### இராமச்சந்திரன் செல்லப்பா (செல்லையா)

நயினாதீவு

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், தாளையடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது 9 1/1, இராமகிருஷ்ண அவெனியூ, வெள்ளவத்தையில் வசித்தவருமான இராமச்சந்திரன் செல்லப்பா நேற்று முன்தினம் (21.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன் - நாகமுத்து அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-கனகாம்பிகை அவர்களின் அன்பு மருமகனும் சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும் கல்யாணி,கருணாகரன்,வசந்தராணி, உதயராணி, ஜெயராணி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சோதிதாசன், சுகிர்தா, வரதராஜசிங்கம், கணேசநாதன், அருட்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராமி, சாருகா, நிலான், கிரிநாத், மீராபானு, நளின், ரவிநாத், ஜஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பார்வதிபிள்ளை, தாமோதரம்பிள்ளை, சௌந்தரம், முத்தையா, செல்லம்மா மற்றும் சின்னம்மாவின் அன்புச் சகோதரனும் நாகரெத்தினம், ஜீவானந்தம், இந்திரானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(24.04.2003)வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*9 1/1, இராமகிருஷ்ணா அவெனியூ,*
*வெள்ளவத்தை, கொழும்பு - 06*
*தொ.பே:01 360232*

தகவல்:
ப.வரதராஜசிங்கம்
(விண்ணன் - மருமகன்)

(C-27526)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.